JL
R673m211, N28.
N28.1.7
187121

1386

Registered No. M. 2330.

ஓம்

# சித்தாந்தம்

" எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே."

25 AUG 1928
MADRAS



| மலர் க | பிரபவ ஆண்டு ஆனித் திங்கள்<br>1928 ௵ ஜூலை ௴ | இதழ் எ |
|---|---|---|



**உள்ளுறை** **பக்கம்**


*இறப்பச்சம்* ... ... *பத்திராசிரியர்* ... ... 145

*திருநாளைப்போவார் தீக்குளித்ததேன்..* *தமிழ்ப்புலவர் - மயிலை. சிவ. முத்துக்குமாரசுவாமி முதலியார்.* ... 149

*தேவார ஆராய்ச்சி* ... ...*சே. வெ. ஜம்புலிங்கம் பிள்ளை* ... 159

*பூவாளூர் சைவசித்தாந்த சங்கத் தீர்மானங்கள்* ... ... ... 164


---


*பத்திராசிரியர்*

**மணி. திருநாவுக்கரசு முதலியார்,**

*ஆசிரியர், பச்சையப்பன் கல்லூரி, சென்னை.*

---

*உதவிப் பத்திராசிரியர்*

*வித்துவான்*

**பாரிப்பாக்கம் - கண்ணப்ப முதலியார்**


---


சைவ சித்தாந்த மகாசமாஜ காரியாலயம்,
92, வரதா முத்தியப்பன் தெரு,
சென்னை.

---

1928

சிறந்த கட்டுரைகள் ! ஏராளமான படங்கள் !!

பொதுஜன நன்மையை நாடி இடைவிடாது உழைத்து தமிழர் உள்ளத்தில்
தேசீய உணர்ச்சியை எழுப்பிவரும் சிறந்த தேசீய பத்திரிகை

## "தமிழ் நாடு"

ஒன்றே

ஒவ்வோர் இதழிலும் அழகு, வீரம், அன்பு, சத்தியம், ஹாஸ்யம், தேசாபிமானம், சமூக சீர்திருத்தம் முதலியவைகள் இனிய செந்தமிழ் நடையில் மிளிர்கின்றன.

பல அறிவாளிகள் எழுதிய கட்டுரைகளும், ஏராளமான படங்களும், வேடிக்கைப் படங்களும் வெளி வருகின்றன.

அறிவை வளர்க்க விரும்பினால் இன்றே

"தமிழ் நாடு"

(வாரப்பதிப்பு)

சந்தாதாரராகுங்கள்

| சந்தா விவரம் | உள் நாடு | வெளி நாடு | தினப் பதிப்பு |
|---|---|---|---|
| 1-வருஷம் | ரூ. 5 0 0 | ரூ. 6 0 0 | ரூ. 20 0 0 |
| 6-மாதம் | ரூ. 3 0 0 | ரூ. 3 8 0 | ரூ. 10 0 0 |
| 3-மாதம் | ரூ. 1 14 0 | ரூ. 2 0 0 | ரூ. 5 0 0 |
| 1-மாதம் | | | ரூ. 1 12 0 |

Ex.

இந்தியாவில் சிறந்தது என்று அனுபவசாலிகளால் மதிக்கப்படும்

## ருக்மணி குக்கர்

என்னும் சமையல் அடுக்கு உங்கள் வீட்டில் இருக்கிறதா? இல்லாவிட்டால் இன்றே ஒன்றைத் தருவியுங்கள்.

இதனால் ஒருமணி நேரத்தில் சாதத்துடன் பல பதார்த்தங்களை நீராவியினால், சிரமமில்லாமலும், சமையற்காரனுடைய உதவியில்லாமலும், மிகக் குறைந்த செலவில் தயார்செய்யக்கூடும்.

கனம் எட்டியாபுரம் ராஜா அவர்கள் எழுதுகிறார் :—மற்ற குக்கர்களை விட ருக்மணி குக்கரே பூரண திருப்தியைக் கொடுக்கிறதென உறுதியாய்ச் சொல்லுகிறேன். இதில் சமைக்கப்படும் ஆகாரம் அதிக சத்துள்ளதாயும், தேகத்திற்கு ஆரோக்கியத்தைக் கொடுப்பதாயும் இருப்பதோடு, மற்ற குக்கர்களில் காணப்படும் துர்வாசனை இல்லாததாயும் இருக்கிறது.

ஸ்ரீமான் டாக்டர் P. வரதராஜலு நாயுடு அவர்கள் எழுதுகிறார்:—நான் தங்கள் குக்கரை என்னுடைய வீட்டில் தினந்தோறும் சமையல் செய்வதற்கு உபயோகப்படுத்தி வருகிறேன். இதில் சமைக்கப்படும் ஆகாரம் மிகவும் ருசியான ருசியை அடைகிறது.

1, 2, 4, 6, 8 பேர்களுக்குத் தகுதியான குக்கர்கள் முறையே
13, 18, 22, 27, 33 ரூபா விலை.

ஒன்று இன்றே தருவியுங்கள். விவர புஸ்தகம் இனம். ஏஜண்டுகள் தேவை.

1-7-28.
31-12-28.

**ருக்மணி குக்கர் கம்பனி,**

இராயபுரம், (11) மதராஸ்.

OFFICE OF THE ... 25 AUG 1928 MADRAS

ஓம்

# சித்தாந்தம்

"எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே"


| மலர் ௧ | பிரபவ ஆண்டு ஆனித் திங்கள்<br>1928 ௵ ஜூலை ௴ | இதழ் ௭ |
| --- | --- | --- |


## இறப்பச்சம்

[பத்திராசிரியர்]

இந்நிலவுலகிலே வாழும் மக்கள் அனைவரும் இறப்பு என்ற சொல்லைக் கேட்ட துணையானே அஞ்சி விதிர் விதிர்க்கின்றனர். முற்றத் துறந்த முனிவரும் இறப்பை அஞ்சிப் பாடிய பாட்டுக்கள் எண்ணிறந்தனவாகக் காணப் படுகின்றன. பழுத்த பழங்களாகவும் நரை திரையோடு கூடியவர்களாகவும் தள்ளாடித் தள்ளாடி விழுகின்றவர்களாகவு முள்ள முதியோரும் மரணபயம் உடையவராக உளர். அங்கமெலாம் குறைந்தழுகு தொழு நோயரும் உண்ணக் கூழுக்கும் உடுக்கக் கந்தைக்கும் ஏக்கறுக் கிடக்கும் வறியோரும் சாக்காட்டை விரும்பி ஏற்கின்றார் இல்லை. ஒரு சிலர் தற்கொலை புரிந்து கொள்ளினும் அவர் அதனை விழைந்து கொள்ளுகின்றார் என்று கூறல் இயலாது. இதற்குக் காரணம் யாது? நாம் ஏன் மரணத்துக்குப் பயப்பட வேண்டும்?

மரணம் அடைந்தபின் நமது நிலை இன்னதென நமக்குப் புலப்படவில்லை. நாம் இப்பொழுது காதலித்து வரும் மனைவியையும் மக்களையும் சுற்றத்தாரையும் நண்பரையும் காண்பதற்கும் அவர் இனிய மொழிகளைக் கேட்பதற்கும் இயலாதவர்களாய் விடுகின்றோம். இதனால் நமக்கு இறப்பிலே அச்சம் இயற்கையாக உண்டாகிறது. இறப்பை அஞ்சியே பலர் இளம்பருவத்திலே துறவு பூண்டனர்; அதன் பொருட்டே பலர் உலக வாழ்க்கையை வெறுத்தனர். சிலர் இறப்பை எஞ்ஞான்றும் எண்ணியெண்ணித் துன்புறுகின்றனர். இறப்புத் துன்பம் ஒருவருக்கு ஒருமுறை வருவதாகவும் பலர் பலமுறை அதனை எண்ணுவதனால் பன்முறை அத்துன்பத்தை எய்துகின்றனர். சான்றோர் நம்மை என்றும் இறப்பை எண்ண வேண்டுமென ஆங்காங்கு அறிவுறுத்தியும் வருகின்றனர். உலக நெறியிலே படிந்துகிடந்து தன்னலம்பற்றியே வாழ்வோர் பெரும்பான்மையும் பட்டிமை பயின்றொழுகுதற்கும் உரியர் ஆதலின் ஆன்றோர்

அடிக்கடி நமக்கு உடல் நிலையாமை முதலியவற்றை வற்புறுத்திக் காட்டுகின்றனர். ஆனால் மரணபயம் வேண்டுமா? வேண்டாமா? என்று ஆராய்ந்து பார்ப்பின் அது வேண்டற்பாலதன்றென்ற முடிவே இக்காலத்துக்குப் பொருந்துமெனத் தோன்றும். ஏனெனில் மரணபயம் உடைய ஒருவன் எவற்றையும் செவ்வனம் செய்ய மாட்டுவான் அல்லன். அவனுக்குக் கற்றற்கும் கேட்டற்கும் மனவெழுச்சி உண்டாதல் இல்லை. அவன் எப்பொழுதும் ஏங்கி நிற்கின்றான். அவனுக்கு நாளடைவில் உடனுக்குடன் தோன்றும் அச்ச உணர்ச்சியினால் நெஞ்சுரம் அழிந்துவிடும். அப்பால் தொட்டதற்கெல்லாம் திகிலடைந்து உயிர் துறப்பான்; அவன் வாழ்க்கை அளிக்கத் தக்கதாக உளது. எத்துணையோ பலர் தம் மகவுக்குச் சிறிது நோய் வரின் தட்டுக்கெட்டுத் தடுமாறித் தமது நிலை குலையப் பெறுகின்றனர்; தமக்கு நோய் சிறிது அணுகப்பெறின் அஃது உடனே முதிர்ந்து தமது உயிருக்கு உலை வைத்து விடுமெனக் கருதி ஆகாயக் கோட்டை கட்டி அறிவிழக்கின்றனர். அந்தோ! வாழ்க்கை இத்தகைய அச்சத்தால் எவ்வளவு பெருந் துன்பத்திற்குக் காரணமாக உளது. இந்நிலையில் நகரத்திலே வாழ்வோர் தன்மை பெரிதும் இரங்கற்பாலது. 'கண்டது பாம்பு கடித்தது மாங்கொட்டை' என்றும் 'காட்டிற்புலியால் இறந்தவர் சிலர்; ஆனால் வீட்டிற் கிலியால் இறந்தவர் பலர்' என்றும் போந்த கட்டுரைகளால் அச்சத்தால் விளையும் அருங் கேடுகள் இனிது விளங்கும்.

அச்சமே மக்கட்கு உள்ள எல்லாப் பகைகளிலும் பெரியது; அச்சம் காரணமாகவே பெரும்பாலும் பைத்தியம் பிடிக்கிறது. அச்சம் உடையவர்களே தமது காரியங்களைச் சிக்கறச் செய்யும் ஆற்றல் இல்லாதவராகக் காணப்படுகின்றனர். அச்சம் பற்றியே தற்கொலை செய்து ஆவி துறக்கின்றனர். அச்சம் உள்ளவரே எல்லா வற்றிற்கும் தாழ்ந்த நிலையை அடைவர். எல்லாத் துணிவிற்கும் அடிப்படையாக உள்ளது இறக்கத் துணிதலே யாகும். இறப்பை அஞ்சாத ஒருவனை உலகம் அஞ்சும். அவனே எல்லாரினும் மேம்பட்டவனாவான். உடம்பின் மேலிருக்கும் பற்றை விட்டு நன்னெறிக் கண்ணே நாடோறும் செல்கின்ற பெரியோனைக் காட்டினும் சிறந்த செல்வன் யார்? அவனைப் பணியாத உயிரும் உண்டோ? அவன் அஞ்சத் தக்க பொருளும் உளதோ? அவன் அஞ்ச வருவதும் ஒன்றுமில்லை. அவனே நமனை அஞ்சாதவன்; அவனே பேரின்பப் பெரு வாழ்விலே திளைப்பவன்.

ஒருவர் உலக நிலையாமையை எண்ணி மனைவி மக்களை விட்டுக் காட்டிலே சென்று குகையிலே ஒதுங்கி வாழ்ந்தார். அங்கே அவருக்குப் புலி புறப்படுமோ? அரிமா வருமோ? பாம்பு கடிக்குமோ? பேய் பிடிக்குமோ? என்னும் அச்ச உணர்வுகள் பிறந்தன. பின்னர் அவரிடம் பலர் வருதற்குத் தொடங்கினர். வருபவரிடம் வாதிப்பதும் தமது கொள்கையைச் சாதிப்பதும் அவருக்கு வேலைகளாக முடிந்தன. அப்பால் இஃது ஒரு குடும்பமேயாம் என உற்றுணர்ந்து அக்குகையை விட்டு ஓடினார். அங்ஙனம் ஓடியவரைக் குறுக்கிட்டான் ஒரு தறுகண் மிக்க கொலைஞன். அவன் துறவி யாவரையும் [illegible] கருதுபவன்; கொலையே



விளையாட்டாக உடையவன்; கள்ளிலே களியாட்டயர்பவன்; காமமே பொருளெனக் கொண்டவன். அவன் இத்துறவியைக் கண்டதும் எதிரே நின்று வாளோச்சினான். துறவி நடு நடுங்கி அஞ்சி அவன் அடியிலே விழுந்து உயிர்ப் பிச்சைக் கேட்டு ஓடி ஒளிந்தார். பின்னர்த் தனியே இருந்தும் துறவியின் மனத்திலே கொலைஞன் வாளோச்சி வருதல் அடிக்கடி தோன்றலாயிற்று. அதனால் அவருக்கு அச்சமும் அவலமும் உண்டாகி அவரைத் துன்புறுத்தலாயின. இத்துன்பம் அவர் உயிரைச் சிறிது சிறிதாக அரித்துத் தின்னத் துவங்கியது. இங்ஙனம் இருப்புழி ஒரு நாள் துறவி பின் வருமாறு சிந்திக்கலானார். "என்னே! என்னே! ஒரு நாள் கண்ட கொலைஞன் காட்சி உடனுக்குடன் என் நெஞ்சிலே தோன்றி என் அறிவையும் ஆற்றலையும் அழித்து என் உயிரைக் கொள்ளை கொள்கின்றது? நான் நினையாத முன்னும் என் எண்ணம் இடைவிட்ட பொழுதெல்லாம் இடையிட்டுத் தடை செய்கின்றது. எல்லாரும் ஒரு நாள் இறப்பர்; நானோ ஒவ்வொரு நாளும் இறந்து வருகின்றேன். இல்லைத் துறந்து வந்த நான் பொருளை வெறுத்தேன்; பொங்கெழில் வாய்ந்த நங்கையை வெறுத்தேன்; பான்மணம் மாறாக் கான் முளையை விட்டேன்; குடியிருந்த வீட்டுக்குக் கொள்ளி வைக்கக்கருதிய பட்டினத்தாரினும் மேன்மை யுடையவன் போல வருந்திப் பெற்ற அருந்தவத் தாயையும் சிந்தை நொந்த தந்தையையும் விட்டு நீங்கினேன்; அறவுபதேசம் கேட்க வந்த நண்பரையும் அகல நீங்கினேன். இத்துணையும் துறந்த யான் வெறும் மயக்கத்தினால் கண் முன்னே வராத ஒருவனை வந்ததாகவும் புலி பாம்பு முதலியன போந்ததாகவும் நினைந்து அந்தோ! அல்லலுழக்கின்றேன். இஃது எற்றினாயிற்று? இக்கேட்டிற் கெல்லாம் காரணம் நான் எல்லாம் துறந்தும் ஒன்று துறந்திலேன். அஃதாவது உடற்பற்றே ஆகும்; அதனை இன்றே துறப்பேன்; நான் இன்றே இறப்பினும் நன்றே; அதுபற்றி இனிச் சிறிதும் அஞ்சேன்; பாம்பு கடிக்கினும் கடிக்க; புலி பாயினும் பாய்க; கொலைஞன் கொல்லினும் கொல்லுக," என்ற உறுதி பிறக்கப் பெற்றவராய் இருந்தார். அன்று முதல் அவர் நெஞ்சம் அச்சம் இன்றி இன்ப நிலையிலே நின்றது. இன்பவெள்ளம் அவர் உள்ளத்திலே ஊற்றெடுத்து ஓடியது. அவர் அவ்வுண்மையினை அனைவருக்கும் எடுத்துரைக்கப் பேரவாக் கொண்டனர். அப்போது ஒருநாள் வனத்திலே யாதொரு குறிக்கோளு மின்றித் திரிந்து வருகையில் அவருக்குத் தாம் முன்னே பார்த்த கொலையாளி ஞாபகம் திடுமென வந்து விட்டது. வந்ததும் அவர், "நல்லது; அக்கொலைஞன் இன்று என் முன்வரின் அவனுக்கு அவன் அடாத செயல்களைப் பற்றிக் கழறுவேன்; அறத்தைப் புகட்டுவேன். ஐயோ! அவன் வீணே கெட்டழிகின்றான்; அவன் வாளோச்சலையும் மருட்டலையும் அணுவளவும் அஞ்சேன்! அஞ்சேன்!" என்று தமக்குள் முணு முணுத்துக் கொண்டு ஏறிட்டுப் பார்த்தார். உடனே தம் எதிரே ஒரு வீரன் வாட்படையுடன் பரிமா இவர்ந்து விரைந்து வருதலைக் கண்டார். அவன் அவர் முன்னர்த் தோன்றிப் புன்முறுவல் செய்தான். துறவி துணுக்குறாது எதிர் நின்று அவனை நோக்கிக் கையமர்த்தி,

"வீரனே, நீ நின்றே?" என்று பெருமிதமாகக் கூறி இளநகை அரும்பினர். வீரன் அவரை நோக்கி, "ஐயா என்னைக் கண்டதும் அரிமாவைக் கண்ட நரிமாவைப் போல நடுங்கும் நீர் இன்று இத்துணைத் துணிவுடன் எதிர்த்து நிற்பதன் காரணம் என்னை?" என்றான். அதற்குத் துறவி, "அப்பா, இனி நான் யாருக்கும் அஞ்சேன், உலகத்துக்கு அப்போது அடிமையாக இருந்தேன்; இப்போது உலகம் எனக்கு அடிமையாகி விட்டது. உனக்கு உன் தீய செயல்களைப் பற்றி எடுத்துச் சொல்லிக் கண்டித்து நல்லறிவுச் சுடர் கொளுத்த எண்ணினேன். நீயும் நல்ல வேளையாக எதிர்ப்பட்டாய்; இனி இத்தீமைகளைச் செய்யாமல் எல்லா உயிர்களிடத்தும் அருள் உடையவனாய் இனிது வாழ்வாயாக" என்றார். வீரனுக்குக் கோபம் பொங்கி எழுந்தது; புலி போலச் சீறினன்; அவன் விழிகள் தீயை உமிழ்ந்தன; மீசை துடித்தது; "யாது சொன்னய்? நேற்றுக் கோழை போல அபயம் பெற்றுச் சென்ற நீ இன்று, வீரனுகிய நம்முன் அஞ்சாது போந்து அறம் உரைக்கின்றனையோ? இதோ ஒரே வீச்சில் உன்னை எமனுலகுக்குக் குடியேற்றுகின்றேன்," என்று கூறித் தனது வாளை ஓச்சினன். துறவியும் இம்மியும் துணுக்குறுமல் அவன் வெட்டை எதிர்த்து நின்றார். அவனுக்கு ஒன்றும் தோன்றவில்லை; வாளை உறையிலே இட்டான்; வாளாது குதிரையைச் செலுத்திக் கொண்டு விரைந்து பறந்தான். துறவி உண்மையைக் கண்டார். என் உயிருக்கு அஞ்சிய பொழுதெல்லாம் நான் ஓடினேன்; அதற்கு அஞ்சாத பொழுது கொலைஞனும் ஓடினன். இனி என்னினும் உயர்ந்தார் யார்?" என்று கருதிச் செம்மாந்து சென்றனர்.

இக்கதையினல் மரண பயத்தினின்றும் விடுபடுவதனல் விளையும் நலங்கள் இவை என நமக்குப் புலப்படவில்லையா? ஆகவே ஒவ்வொருவரும் இறப்பச்சத்தை அறவே விட முயலல் வேண்டும். தன் உடம்பிலே உள்ள பற்றை விட்ட ஒருவனுக்கு மனைவி மக்கள் பொருள் முதலியவற்றிலே பற்று ஒழிதல் சாலவும் எளிது. ஆனல் இஃது அருளாலன்றி வாய்க்காது என்றும் அவ்வருள் எளிதிலே வாராதென்றும் கூறிச் சிலர் நெகிழ்கின்றனர். அருள் எப்பொழுது கிடைக்கும்? நாம் மேலே கூறிய மனப்பான்மையினை அடைந்த பின்னரேயாம். அப்பொழுது எல்லாம் தாமே வந்தடையும்.

இதனல் உலக வாழ்க்கையிலே வெறுப்புற்றுக் கிடக்க வேண்டும் என்றுதல், மனைவி மக்களிடம் கொஞ்சிக் குலாவுதல் கூடாது என்றுதல், பொருளை யீட்டலாகாது என்றுதல் நாம் கூறவில்லை. உலகத்திலே நன்கு வாழலாம்; மனைவியைப் பாராட்டலாம்; மக்களைச் சீராட்டலாம்; நண்பரைக் கூட்டலாம்; பொருளை நல்வழியிலே ஈட்டலாம். ஆனல் எத்தொழிலைச் செய்தாலும் தனக்கென்றே வரைந்து கொள்ளாமலும் பிறர் நலத்தைக் கெடுக்காமலும் தன் கடமையினைச் செய்து கொண்டு பிறவற்றையெல்லாம் கடவுள் திருவருள் என இருத்தலே செய்யத்தக்கதாம். உதாரணமாக, குழந்தைக்கு நோய் வந்ததெனக் கொள்ளுவோம். அதற்குச் சிறிதும் மனந் தளராமல் தக்க மருத்துவரைக் கொண்டு பரிகாரம் செய்யலாம்; அக்குழவிக்கு யாது வருமோ என அஞ்ச வேண்டுவதில்லை. கடமையை முற்றும் கருத்துடன் செய்து பிறவற்றைப் பற்றி நாம் எண்ணுமல் இருத்தல் வேண்டும். இங்ஙனமே எல்லாவற்றிலும் உள்ளத்தைத் திருத்திக் கொள்ள நாடோறும் பாடுபட வேண்டும். தீய எண்ணங்களைத் தியானத்தினல் ஒழித்து நல்லெண்ணங்கள் ஓங்கி வளரும்படி செய்தல் வேண்டும். மெல்லிய இனிய சொற்களைப் பேசப் பழக வேண்டும்; இறப்பை அஞ்சாதவனும் தீவினை செய்தலை அஞ்ச வேண்டும். தனக்காகச் செலவு செய்தலைக் குறைத்துக்கொண்டு பிறருக்கு நன்மை செய்ய முன்வர வேண்டும். பிறருக்கு நன்மை செய்பவன் நல்லவனேயன்றித் தன்னளவில் அமைந்து யாருக்கும் தீமை செய்யாதவன் நல்லவனுக அறிஞரான் எண்ணப்படான். உணவு, துயில், இணைவிழைவு முதலான எவற்றினும் பத்தியத்தைக் கைக்கொள்ள வேண்டும். துயிலுக்கும் இணைவிழைச்சுக்கும் உண்டியே காரணமாக இருத்தலின் அதனையே முதற்கண் ஒழுங்குற அமைத்துக்கொள்ள வேண்டும்.



---

# திருநாளைப்போவார் தீக்குளித்ததேன்?

## கடவுளுக்குங் குலவேற்றுமை யுண்டோ?

[தமிழ்ப்புலவர் - மயிலை. சிவ. முத்துக்குமாரசுவாமி முதலியார்]

திருநாளைப் போவார் என்பவர் அறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஒருவர் என்பதும், அவர் சோழ நாட்டிலே மேற்கா நாட்டைச் சார்ந்த ஆதனூர்ப் புலைப்பாடியிலே பிறந்தவர் என்பதும், இறைவனிடத்தே இடையறு அன்பு பூண்டிருந்தும் அவர், தாம் புலைக்குலத்துதித்தமை குறித்து ஆலயத்திற்கு அப்புறமிருந்தே அரனை வழிபட்டு வந்தனரென்பதும், திருப்புன் கூரிலே அவரது வழிபாட்டிற்குத் தடையாயிருந்த திருநந்தி தேவரையும் சிவபெருமான் விலகியிருக்க அருள் புரிந்தார் என்பதும், அவர் தில்லை சென்று கோயிலின் உட்புகுந்து வணங்க இயலாது வருந்திய காலத்து இறைவன் அவர்தம் கனவில் தோன்றி, 'அன்பனே, நீ தீக்குளித்துத் தில்லைவாழந்தணரோடு எம் முன் அணைவாய்', என அருள் செய்ய அவ்வாறே அவ்வடியவர் தீயில் மூழ்கி ஆதிசைவ அந்தணராகி ஆராத காதலினல் அம்பலம் அடைந்து அருட்பேரொளியில் இரண்டறக் கலந்தாரென்பதும் அன்பர் பலரும் அறிந்ததேயாகும்.

தம்மதி நுட்பத்தால் எதனையும் ஆராய்ந்து முடிவு கட்ட விழைவு கொள்ளும் இக்காலத்தே, திருநாளைப் போவார் அந்தணராகி அம்பலம் அடைந்தமை குறித்து அன்பர்களுள் பலர் பல வேறு நியாயங்கள் கூற முற்படுகின்றனர். அவர்களுள் ஒரு சிலர், திருநாளைப் போவார், தில்லைக் கோயிலுள் நுழைந்து கடவுளை வணங்க விழைந்தாரென்றும், அவர் புலையராதலால் கோயிலுள் நுழைதல் கூடாதென்னும் கருத்தால் இறைவன் அவரை ஆதிசைவ அந்தணராக்கி அம்பலத்தே ஆட்கொண்டாரென்றும் இதனல் இறைவனுக்கும் வகுப்பு வேற்றுமை உடன்பாடே என்பது நன்கு விளங்குகின்றதென்றும் கூறித் தம் வரு

ணாச்சிரம தருமக் கொள்கையினை நிலை நாட்ட முற்படுகின்றனர். மற்றும் சிற்சிலர் அவர்தம் கொள்கையை மறுப்பான் வேண்டி முன்வந்து, அதற்குத் தக்க சான்றுகள் புலப்படாமையாலோ, ஆய்ந்தோய்ந்து பாராமையாலோ, அச்சரிதமே பொய் யென்றேனும், சேக்கிழார் அறியாது கூறினரென்றேனும், அவர் அவ்வாறு கூறிலர் அஃது இடைச்செருகல் என்றேனும் கூறத் துணிந்து விடுகின்றனர்.

இந்நிலையில் 'திருநாளைப் போவார் தீக்குளித்ததேன்'? என்றும் 'குலவேற்றுமை கடவுளுக்கும் உடன்பாடோ?' என்றும் என் நண்பரிற் சிலரும், மாணவரிற் பலரும் என்னை வினவிய காரணத்தால் இச்சிறு கட்டுரை என்னால் எழுதப்படலாயிற்று. சிவனைக் குறித்தும் அவன் அடியவரைக் குறித்தும் எழும் விபரீத உணர்ச்சிகளைப் போக்குதற்கு மிகவும் உரிமையுடையது நம் 'சித்தாந்த'மே யாதலின் இதன்கண் இது வெளிவரல் தக்கதேயாம்.

இவ்வுலக வொழுக்கமானது என்றும் ஓரே நிலையில் நின்றதில்லை. அஃது ஊசற் கயிறுபோன்று மாறி மாறியேனும், பெருங் காற்றிற்பட்ட இலவம் பஞ்சுபோன்று மக்கள் மனஞ்சென்ற வழியேனும் அவ்வப்போது நிலைமாறியே வருதலை நாம் சரித வாயிலாகவும் கண் கூடாகவும் காண்கின்றோம். நம் தமிழ்நாட்டிலே சுமார் இரண்டாயிரம் அல்லது மூவாயிரம் ஆண்டுகட்கு முன்னர் நிகழ்ந்த ஐந்திணை யொழுக்கத்தினையும், இடையில் ஆரியக் கலப்பினால் நேர்ந்த வகுப்பு வேற்றுமையினையும், அஃது இக்காலத்தே ஒன்று பலவாய்ப் பயனின்றி நிற்கும் நிலையினையும், இனி வரக்கூடும் பல்வேறு நிலைகளையும் ஊன்றி நோக்குவார்க்கு இதன் உண்மை எளிதில் புலனாகும்.

நாம் ஒருவரின் உள்ளக் கருத்தைக் குறித்தேனும் அவர் தம் செயலைக் குறித்தேனும் ஆராயப் புகுமுன், அவர் தம் கால நிலையினைக் குறித்தும், அக்காலத்திருந்த பழக்க வழக்க ஒழுக்கங்களைக் குறித்தும் முதலில் நம் மனத்தின்கண் நன்கு பதித்துக்கொள்ளுதல் வேண்டும். அவ்வாறன்றி இக்கால நிலையினையும், இக்காலப் பழக்க வழக்க வொழுக்கங்களையும் துணை கொண்டு நோக்கின் அஃதொரு சிறந்த ஆராய்ச்சியாகச் சான்றோரால் கருதப்படாதழிவதோடு அதனால் விளையும் விபரீதங்களும் மிகப் பலவாய் மல்கும். உதாரணமாக,

“ சிறியகட் பெறினே யெமக்கீயு மன்னே
பெரியகட் பெறினே
யாம்பாடத் தான் மகிழ்ந்துண்ணு மன்னே
சிறுசோற் றானு நனிபல கலத்தன் மன்னே
பெருஞ்சோற் றானு நனியல கலத்தன் [மன்னே
யென்பொடு தடிபடு வழியெல்லா மெமக்கீயு [மன்னே
யம்பொடு வேனுழை வழியெல்லாந் தானிற்கு [மன்னே.”

எனவரூஉம் புறநானூற்றுச் செய்யுளைப் படித்த துணையானே அனைவர்க்கும் நீதி நூல் உரைத்த ஔவையார் கள்ளுண்டு புலால் தின்றது தவறென்றேனும்,

“ புலவு நாற்றத்த பைந்தடி
பூநாற் றத்த புகைகொளீஇ யூன்றுவை
கறிசோ றுண்டு வருந்துதொழி லல்லது
பிறிதுதொழி லறியா வாகலி னன்று
மெல்லிய பெரும தாமே”

என்று கபிலர் பாடியிருத்தல் கொண்டு 'ஓ, அந்தணர் புலாலுண்டல் அடா' தென்றேனும் நாம் முடிபு கட்டி ஔவையாரையும், கபிலரையும் இழித்துக் கூற முற்படலாகாது. அவர்கள் காலம், அக்காலமக்களின் பழக்கவழக்க வொழுக்கங்கள் முதலியவற்றை ஆராய்ந்த பின்னரே நமக்கு அவ்வுண்மை நன்கு தெரிய வரும். ஆதலின் திருநாளைப் போவாரின் காலத்தையும், அக்கால மக்களின் உள்ளப் பாங்கினையும், பழக்க வழக்க வொழுக்கங்களையும் நாம் முன்னர் ஆராய்ந்தாலன்றி அவர் தீக்குளித்து அந்தணராயதின் நோக்கம் நமக்கு நன்கு தெரிய வாராது.



திருநாளைப் போவாரின் காலம் இன்னது தான் என்று நமக்கு நன்கு தெரியா விடினும் கால ஆராய்ச்சியாளர்களின் துணை கொண்டு ஒருவாறு நாம் அறிந்து கொள்ளலாம். திருத்தொண்டத் தொகை பாடியருளிய ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகளின் காலம் ஏறக்குறைய ஒன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியாகும். அவர் அத்திருத்தொண்டத் தொகையுள் “செம்மையே திருநாளைப் போவார்க்கு மடியேன்,” என்று பாடியுள்ளதாலும், அவருக்கு முன்னர் ஏழாம் நூற்றாண்டில் இருந்த திருஞான சம்பந்த மூர்த்தி சுவாமிகளும், திருநாவுக்கரசு சுவாமிகளும், இவர்கட்கு முன்னிருந்த அன்பர்களும் திருநாளைப் போவாரைக் குறித்து யாதொன்றுங் கூறியிருப்பதாகத் தெரிய வாராமையாலும் இவர் காலம் ஏழாம் நூற்றாண்டிற்கும் ஒன்பதாம் நூற்றாண்டினுக்கும் இடைப்பட்டதாகுமெனக் கொள்வது தவறாகாது.

இனி அக்காலப் பழக்க வழக்கங்களுள் நமக்கு இன்றியமையாது வேண்டப்படுவன சமயமும் வகுப்புமேயாதலின் அவ்விரண்டினை மட்டில் ஒருவாறு ஆராய்வோம்.

நம் தமிழ் நாட்டிலே, சுமார் மூவாயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட காலத்திலே, சமயச்சண்டை வகுப்பு வேற்றுமை முதலியன இருந்ததாகக் கருதுதற்கிடனில்லை. அக்காலத்தே மக்கள் வாழும் நிலத்தின் தன்மைக்குத் தக்கவாறும், ஆங்குப் பெறலாகும் பொருள்கட்குத் தக்கவாறும் உண்பன உடுப்பன கொள்வன கொடுப்பன முதலிய பழக்க வழக்க ஒழுக்கங்கள் நிகழலாயின. அம்முறைப்படி அக்காலத்தே குறிஞ்சி மருதம், முல்லை, நெய்தல் பாலை என ஐந்து வகையாக நிலங்கள் பகுக்கப்பட்டிருந்தன. அந்நிலங்களில் உள்ளவர்கள் ஆங்காங்குக் கிடைக்கும் உணவுப் பொருள்களை யுண்டும், ஆடையாபரணங்களை யணிந்தும் வாழ்ந்து வந்தனரேனும் ஒரு நிலத்தினர் மற்றொரு நிலத்தினருக்கு உயர்ந்தோராகவேனும் தாழ்ந்தோராகவேனும் கருதி வந்தனர் என்று நாம் எண்ணுதற்கில்லை. மருத நிலத்தான் குறிஞ்சி நிலத்தினனோடு உண்பான், உடுப்பான், உறவுகொள்வான். இவ்வாறே ஒரு நிலத்தான் மற்றொரு நிலத்தினனோடு ஒற்றுமை காட்டியே வாழ்ந்து வந்தனன். அக்காலத்தே ஒவ்வொரு நிலத்தினும் தலைவன் எனவும் குடிகள் எனவும் இரு பகுப்புக்கள் இருந்தனவெனினும் அவ்விரு பகுப்பினரும் தமக்குள் உண்ணுதலிலேனும், உறவு கொள்வதிலேனும் ஒருவருக்கொருவர் வேற்றுமை காட்டியதாகத் தெரிய வரவில்லை. சமயச் சார்பாக நோக்குமிடத்து அந்தந்த நிலமக்களின் தேவைகட்குத் தக்க குணங்களமைந்த முருகன், திருமால், இந்திரன், வருணன், காளி முதலிய

தெய்வங்களின் வழிபாடும், எல்லா நில மக்களுக்கும் பொதுவான கந்தழி என்னும் கடவுள் வழிபாடும் 'இருந்தனவெனினும் அப்போதும் மக்கள் சமயச் சண்டைகள் புரிந்து தங்களுக்குள் உயர்வு தாழ்வுகள் காட்டிக் கொண்டதாகத் தெரியவரவில்லை.

சிவம் என்னும் சொல்லைக் குறித்துப் பலர் பலவிதமாகக் கூறினும் சிவத்தின் இலக்கணத்தையும் அதனை வழிபடும் முறையையும் உணர்த்தும் சைவ சித்தாந்தமாய அன்பு நெறியைத் தமிழ்மக்கள் பண்டைக் காலத்தி லிருந்தே கடைப்பிடித்து வந்தனர் என்பதற்கும், அக்கொள்கை வடமொழி வேதத்தில் சேர்க்கப்பட்டோ வலிந்து பொருள் செய்யப்பட்டோ, ஆகமங்களும் உபநிடதங்களும் அவற்றின் வியாக்கியானங்களுமாய் விரிந்து வெளி வரலாயிற்று என்பதற்கும் அவ்வன்பு நெறியில் நின்று ஞானநிலையை அடைந்த பெரியோர் தென்னாட்டில் மட்டும் தலைசிறந்து மிகப் பலராய் மல்கியிருந்ததும், அக்கொள்கைகள் சங்க இலக்கியங்களில் சர்வ சாதாரணமாக வழங்கப் பெறுதலுமே போதிய சான்றுகளாகும்.

பின்னர் ஆரியக் கலப்பு அதிகரிக்க அதனால் ஐந்திணை யொழுக்கம் அறவே யொழிந்து அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் முதலிய வகுப்பு வேற்றுமை தோன்றவும் அன்பு நெறியோடு யாகம் முதலியன கலக்கவும் ஆயின. நாளாவட்டத்தில் அவை அம்மட்டில் நில்லாது பல் வேறு குலங்களும் கோத்திரங்களும் உயர்வு தாழ்வென்னும் வேற்றுமைகளும், ஒருவர் பிறிதொருவர்க்கு அடிமையாதல், தீண்டாமை முதலியவைகளும், பல் வேறு சமயங்களும் சமயச் சண்டைகளும் நிகழலாயின. இவைகளின் வரலாற்றினை விரிவஞ்சி இம்மட்டோடு நிறுத்தித் திருநாளைப் போவாரின் கால நிலையினைச் சிறிது ஆராய்வாம்.

திருநாளைப் போவாரின் காலத்திற்குச் சிறிது முன்பிருந்த திருநாவுக்கரசு சுவாமிகள்,

“சாத்திரம் பல பேசுஞ் சழக்கர்காள்
கோத்திரமுங் குலமுங்கொண் டென்செய்
[வீர் ”

எனக் கூறுதலால் அக்காலத்து மக்கள் வடநாட்டு மக்களின் கலப்பால் பொருளற்ற சாத்திரங்களில் கட்டுப்பட்டுக் கோத்திரத்தையுங் குலத்தையுமே பெரிதாக மதித்து வந்தார்கள் என்பதை நாம் நன்கு அறியலாகும். அன்றியும் அப்பெரியாரே பிறிதோரிடத்தே “ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும் அவர் கண்டீர் யாம் வணங்குங் கடவுளாரே” என உரைக்குங்கால் ‘புலையரேனும்’ என்று இழிவு சிறப்பும்மை கொடுத்துக் கூறுதலால் அக்காலத்து மக்கள் புலைக்குலத்தை இழிவாக மதித்திருந்தார்கள் என்பது புலனாகின்றது. அக்காலத்தே மறையோராகிய சிலர் நீங்கலாக மற்றையோர்க்கு அடிமைத் தன்மை இருந்ததென்பதற்குச் சேக்கிழார் தடுத்தாட்கொண்ட புராணத்தே சுந்தரமூர்த்தி சுவாமிகள் கூற்றாக, “ஆசிலந்தணர்கள் வேறோரந்தணர்க் கடிமையாதல் பேசவின்றுன்னைக் கேட்டோம் பித்தனோ மறையோன் என்றார்,” எனக் கூறுதலே போதிய சான்றாகும். அன்றியும் திருநாவுக்கரசு சுவாமிகளது, மேலே எடுத்துக் காட்டிய இருவாக்கியங்களாலும் அவரே மற்றுமோரிடத்தே,



“எவரேனுந் தாமாக விலாடத் திட்ட
திருநீறுஞ் சாதனமுங் கண்டா லுள்கி
யுவராதே யவரவரைக் கண்ட போது
வுகந்தடிமைத் திற நினைந்தங் குவந்து
[நோக்கி
யிவர்தேவ ரவர்தேவ ரென்று சொல்லி
யிரண்டாட்டா தொழிந்தீசன் திறமே
[பேணிக்
கவராதே தொழுமடியார் நெஞ்சி னுள்ளே
கன்றாப்பூர் நடுதறியைக் காண லாமே”

என்று கூறி யிருத்தலானும் இவை போன்ற பிற பாடல்களானும், அந்தணச் சிறுவராய திருஞான சம்பந்த மூர்த்தி சுவாமிகளும், வேளாளப் பெரியோராகிய திருநாவுக்கரசு சுவாமிகளும் ஒருவரை யொருவர் விழுந்து பணிந்ததாகவும், அப்பூதியடிகள் நாயனார் என்னும் அந்தணர் திருநாவுக்கரசு சுவாமிகள் பாதங்களில் வீழ்ந்து பணிந்ததோடு அவரோடு உடனிருந்து உண்டதாகவும், “துடியன் பாணன் பறையன் கடம்பனென் றிந்நான்கல்லது குடியு மில்லை” எனச் சங்க காலத்திலேயே வேறு பிரித்தெண்ணப்பட்ட நால்வகைப் பகுப்புள் ஒன்றாய பாணக் குடியுள் பிறந்த திருநீலகண்ட யாழ்ப்பாணநாயனார் தம் மனைவியாரோடும் இரவின்கண் தங்கியிருத்தற்குத் தக்க இடங்காட்டத் திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகள் திருநீலநக்க நாயனாரை வினவிய காலத்து அவர், தாம் நித்தம் எரியோம்பும் ஓமகுண்டத் தருகிலேயே அவ்விருவரும் படுத்துறங்க இடந் தந்ததாகவும் தொண்டர் புராணங் கூறுதலானும் சமயச்சார்பாகவேனுங் குல வேற்றுமையை யொழித்தற்கு அக்காலத்திலேயே பல பெரியோர்கள் முயன்றதாகத் தெரியவருகின்றது. எனினும் குலவேற்றுமையின்மை மேற்கூறிய ஒரு சிலரிடத்து மட்டுங் காணப்பட்டதேயன்றி அக்காலத்தும் அதற்குப் பின்னரும் அது பல்லோராலுங் கையாளப் படவில்லை என்பதற்கு, அப்பெரியோர் காலத்திற்கு ஒரு சில நூற்றாண்டுகள் பின்னால் தோன்றிய ஸ்ரீ சேக்கிழார் சுவாமிகள் தாம் இயற்றியருளிய திருத்தொண்டர் புராணத்துள், மேற்கூறிய பெரியார் காலத்தும் அவர்கட்கு முற்காலத்தும், பிற்காலத்தும் தோன்றிய சிறுத்தொண்ட நாயனார், காரைக்காலம்மையார், இளையான்குடிமாற நாயனார் முதலிய அன்பர்களது சரிதத்துள் சிவபெருமான் வந்து அமுதுண்டார் என்று கூறும்போது “வயிரவராய்த் திருமலை நின்றணைகின்றார்” என்றும், “நற்றவத் தவர் வேடமே கொடு ஞாலமுய்ந்திட நண்ணினார்” என்றும், “பரமனார் திருத்தொண்டர் உணவின் மிகு வேட்கையினா லொருவர் மனையுட் புகுந்தார்” என்றுங் குலஞ் சுட்டாது கூறிப் பிற இடங்களிலெல்லாம் பெரும்பாலும் அந்தணராக வந்ததாகவே கூறுதலே தக்க சான்றாகும்.

இதுகாறுங் கூறிய வாற்றால், நம் தமிழ் நாட்டிலே திருநாளைப் போவார் காலத்துக்குச் சிறிது முன்னரும் பின்னரும் குலவேற்றுமை தலைசிறந் திருந்ததென்பதும், அன்றியும் புலையர் குலம் மிகவும் இழிவாக அக்காலத்தவரால் கருதப்பட்டு வந்த தென்பதும் நன்கு தெரியக் கிடக்கின்றன.

ஒரு வகுப்பினர் ஒரு காலத்தே உடல் வன்மை இன்மையாலோ வறுமையின் கொடுமையாலோ, பிறவேறு காரணங்களாலோ மற்றொரு வகுப்பினருக்குக் கீழ்ப்பட்டு அவர்கட்கு அடிமையாக விருந்து உழைக்க நேர்ந்துவிடின் பின்னர் அவ்வகுப்பினர் உடல்

வன்மையும், செல்வமும் பெற்று அடிமைத் தன்மையும் ஒழிந்து இன்புற்று வாழுங் காலத்தும் கல்வியறிவு பழக்க வழக்க ஒழுக்கங்களில் உயர்ச்சி பெறுத லில்லை. அவர்கள் ஒருகால் நாளடைவில் உயர்ச்சி பெறினும் பிற உயர்ந்த வகுப்பினரோடு தாமும் சமமென எண்ணிக் கொள்வ தில்லை. அவ்வாறு அவர்கள் தம்மைச் சமமாக எண்ணிக்கொண்டாலும் அவ்வுயர்ந்த வகுப்பினரென்போர் அவர்களோடு அளவளாவிக் கலந்து கொள்வதுமில்லை. நெடுநாளைப் பழக்கமே இவைகட்குக் காரணமாகும். ஆதலின் அவை யொழிதற்கும் அவ்வாறே பல நாட்கள் செல்கின்றன.

இதனாலன்றோ திருநாவுக்கரசு சுவாமிகளைப் போன்ற சிறந்த பெரியோர்கள் அக்காலத்தே சமயச் சார்பாகவேனும் குல வேற்றுமையை ஒழித்தல் வேண்டும் என்னும் நோக்கத்தால் பலப் பல நீதிகள் எடுத்துரைத்தும், தம் நடத்தையில் நன்கு காட்டியும் அக்குல வேற்றுமை அறவே யொழியாது மேன் மேலும் வளர்ந் தோங்குவ தாயிற்று. சைவ சமயத்திற்கு முற்றும் புறனாயிருந்த புத்தர், சமணர், சாக்கியர் முதலாயினோரிற் பலர் சைவராகியும் அக்காலத்தே உடனிருந்த புலையர் வேடர் முதலாயினோரிற் பலர் சைவ சமயத்தின் உண்மையை உணராதிருந்ததின் காரணமும் இதுவே யன்றோ ?

மேல் வகுப்பின ரென்போர் ஒரு வகுப்பினரை எவ்வளவு தாழ்த்தி வைத்திருந்தன ரேனும் அவ்வகுப்பினர் தாம் தாழ்ந்த வகுப்பினரல்லர் என்பதை என்று உணர்கின்றனரோ அன்றே அவ்வுயர்வு தாழ்வுகள் உலகின்கண் நில்லாது பறந்தோடும். ஒரு வகுப்பினர் உலகில் உயர்ந்து தோன்றுதற்குப் பிற வகுப்பினர் தம்மைத் தாழ்வாகக் கருதிக்கொள்ளுதலே காரணமாகும். ஒருவன் தன்னைத் தாழ்ந்தோனாகக் கருதானாகில் உலகில் உயர்ந்தோன் எவனும் இல்லையாகின்றான். ஒரு கூட்டத்தாருள் ஒருவன் தலைவனாக விளங்குதற்குக் காரணமும் அதுவே யாகும். அக்கூட்டத்தார் என்று தாம் அவனினும் தாழ்ந்தவ ரல்லர் என எண்ணுகின்றனரோ அன்றே அவன் தலைமைத் தன்மையும் ஒழிகின்றது.

இவ்வுண்மையின் வண்ணம் திருநாளைப் போவாரின் வகுப்பார் தம்மைப் பிற வகுப்பினரினுந் தாழ்வாகவே எண்ணி யிருத்தல் வேண்டும் என்பது பெறப்படுகின்றது. அல்லையேல் அவர்கள் அதுபோதே பல்வகையானும் வழக்கிட்டு உயர்நிலை அடைந்திருப்பர். அவ்வாறின்மையான் ஞானத்தின் மிக்க திருநாளைப் போவாரும் பழக்க வாசனையால் தம்மை இழிகுலத்தின ரென்றும், கோயிலுக்குள் செல்லுதற்கு அருகரல்லர் என்றும் எண்ணியிருந்தார் என்பது ஸ்ரீசேக்கிழார் சுவாமிகள், தாம் அருளிச் செய்த பெரிய புராணத்தின் கண்ணே, தில்லை சென்று வணங்குதல் வேண்டும் என்று திருநாளைப் போவார் கருதியதாகக் கூறும்போது,

> " அன்றிரவு கண்துயிலார்
> புலர்ந்ததற்பின அங்கெய்த
> ஒன்றியணை தருதன்மை
> யுறுகுலத்தோ டிசைவில்லை
> என்றிதுவும் எம்பெருமான்
> ஏவலெனப் போக்கொழிவார்
> நன்றுமெழுங் காதல்மிக
> நாளைப்போ வேனென்பார்."

என்றும், அவர் தில்லையின் எல்லையை அடைந்தபோது,

> " மல்கு பெருங்கிடையோது
> மடங்கள் நெருங்கினவுங்கண்
> டல்குந்தங் குலநினைந்தே
> யஞ்சியணைந்திலர் நின்றார் "

எனவும், அவர் ஆலயத்திற்கு உட்சென்று வணங்குதற் கின்மையால் வருந்தித் துயிலுறுங் காலத்து,

> " இன்னல்தரும் இழிபிறவி
> இதுதடையென் றேதுயில்வார் "

என்றும் சொல்லி யிருத்தலால் நன்கு தெரிய வருகிறது. திருநாளைப் போவார் தம் குலத்தை மிக இழிவாகக் கருதி வந்தமையால் அக்காலக் கொள்கையின்படி வணிக வேளாள அரசர் குலங்கள் தம் குலத்தினும் உயர்ந்தவென்றும், அந்தணர் குலம் யாவற்றினும் உயர்ந்ததென்றும் கருதி யிருத்தல் வேண்டும். ஒரு கடைக்குலத்தோன் உயர்வடைய விரும்பின் இடைக் குலங்களை விரும்பாது முதற் குலத்தையே விரும்புதலும், முதற் குலத்தோன் ஒருவன் தாழ்வடைய நேரின் இடைக் குலங்களில் நில்லாது கடைக்குலத்தே கலந்துவிடுதலும் உலக வழக்காகும். அன்றியும் கடவுளர் மீதுள்ள ஆராத பெருங்காதலால் அவரைக் கட்டியணைத்துக் களிபேருவகை பூண்டிருக்கக் கருதிய நம் திருநாளைப் போவார் அக்கால முறைப்படி கடவுளரைத் தொட்டு வழிபடுதற்குரிய அந்தணர் வகுப்பில் தாம் பிறத்தற்கில்லையே என்று எண்ணியேங்கி இளைத்திருப்பாரே யன்றிப் பிற வகுப்புக்களைக் கருதற்குக் காரணம் சிறிதும் இல்லை. இத்தகைய காரணங்களைக் கொண்டு திருநாளைப் போவார் தீக்குளித்ததேன் என்பதை நாம் ஆராய்வோமானால் அதன் உண்மை நமக்கு எளிதில் தெரிய வராமற் போகாது.

மக்களின் உள்ளநிலை அவ்வக்கால நிலைக்குத் தக்கவண்ணம் மாறும் இயல்பினை யுடையதாதலால் திருநாளைப் போவார் அக்கால நிலையின்படி தம்மை இழிந்த குலத்தவ ரென்றும், தாம் கோயிலுக்குள் செல்லத் தகுதி யுடையவ ரல்லரென்றும் எண்ணியதோடு அக்காலத்தே மிகவும் சிறந்ததென்று கருதப்பட்ட அந்தணர் வகுப்பில் தாம் பிறவாமைக்குப் பெரிதும் வருந்தியும் வந்தனர். அடியவர் விரும்பும் வண்ணமே அருள்செய்யும் இறைவன் அவர் உள்ளக் கருத்து நிறைவேறும் வகையில் அவரைத் தீக்குளிப்பித்து அந்தணராக்கி ஆட்கொண்டான்.

திருநாளைப்போவார் தம்மையும் தம் குலத்தையும் இழிவாகக் கருதாது மக்களுள் ஒருவருக்கொருவர் பிறப்பினால் வேற்றுமை யில்லை யென்னுங் கொள்கையுடையோரா யிருந்திருப்பாராயின் தில்லைக் கோயிலைக் கண்டவுடனே ஆராத காதலினால் ஆலயத்துள் ஓடிச்சென்று இறையவனைக் கட்டியணைத்து உச்சிமோந்து உடும்புப் பிடியென இமைப்போதும் அகலாதிருந்து இன்புற்றிருப்பர். அதுபோது அந்தணர் யாரேனும் வந்து தடை செய்திருப்பினும், அவர்தம் பேரன்பு கண்ட பெருமான் அக்கணமே அருளுருக் கொண்டு வெளிப்பட்டேனும், அசரீரியாகவேனும், கனவிலேனும் அப்பெரியாரின் பேரன்பின் பெருக்கினை அங்குள்ள அந்தணர் பலரும் அறியச் செய்திருப்பர். அன்றியும் அவர் குல வேற்றுமையைக் குறித்துச் சிறிதுங் கருதாதவராய் இருந்திருப்பின் அந்தணர் எவருந் தடை செய்யா திருக்கத் திருமயிலை வாயிலார் நாயனார் போன்றேனும், திருநின்றவூர்ப் பூசலார் நாயனார் போன்றேனும் [illegible]த்தினுள்ளேயே கோயி[illegible] வழிபா[illegible] செய்து



18712

யின் அருமையினையும், அதனை அடை தற்கு அக்காலத்திருந்த தடைகளையுங் காட்டுமே யன்றிச் சிவபெருமானுக் கேனும், சைவ சித்தாந்த நன்னெறியி லேனுங் குலவேற்றுமை யுண்டு என் பதை நாட்ட வந்தன ஆகா. சிவபெரு மானுக்குக் குலவேற்றுமையில்லை என் பஃது நன்கு நமக்கு அறிவித்தற்காக வன்றோ தங்குலமல்லாத பரவையாரை யும், சங்கிலியாரையுந் திருமணஞ் செய்து கொண்டதோடு அமையாத நம் சுந்தரமூர்த்தி சுவாமிகள்,

“ நற்றமிழ்வல்ல ஞானசம்பந்தன்
நாவினுக்கரையன் நாளைப்போவானும்
கற்றசூதன் நற்சாக்கியன் சிலந்தி
கண்ணப்பன் கணம்புல்லன் என்றிவர்கள்
குற்றமே செய்யினுங் குணமெனக் கருதுங்
கொள்கைகண்டு நின் குரைகழலடைந்
பொற்றிரள் மணிக்கமலங்கள் மலரும் [தேன்
பொய்கைசூழ் திருப்புன் கூருளானே ”

எனப் பாவிலும் அமைத்துப் பாடுவா ராயினர்? இதில்குற்றம் என்பது திரு நாளைப் போவார், ஆவுரித்துத் தின்றுழ லும் புலையராய் இருந்தும் அக்காலக் கொள்கைக்கு மாறாகத் தாம் ஆலயஞ் சென்றமையும் குணம் என்பது அதற் குப் பெருமான் உடன்பட்டமையு மன்றோ?

சிவபெருமானுக்குக் குலவேற்றுமை யில்லை யெனில் அப்பெருமான் திரு நாளைப் போவாரை ஏன் அந்தணராக்கி ஆலயத்துள் ஆட்கொள்ளுதல் வேண் டும்? அப்புலையுடம்போடே அவர்க்கு அருள் செயலாகுமே எனில் எல்லாப் பற்றினையும் ஒழித்திருந்த திருநாளைப் போவார்க்குத் தாம் அந்தணராக வேண்டும் எனவும் ஆலயத்துட் செல்லு தல் வேண்டும் எனவும் பேரவா இருந்த மையானும் அவ்வாசைதானும் பிறவிக் குக் காரண மாதலானும் அப்பற்றினை யொழித்தற்குப் பெருமான் அவர் விரும்பியவாறே அருள் புரிந்தார்.

இதனால் சிவபெருமானும் அவரை வழிபடுஞ் சமயமாய சைவ சித்தாந்த முங் குலத்திற்கேனும் கோத்திரத் திற்கேனுங் கட்டுப்பட்டனவல்ல என் பதும், எல்லா உலகங்கட்கும் இறைவ னாய், எல்லா உயிர்கட்குந் தந்தையுந் தாயுமாய், அறிவு சொரூபமாய், கருணை யங்கடலாய், இன்பக் களஞ்சியமாயுள்ள இறையவன் எழுந்தருளி யிருக்கும் ஆல யத்தின்கண் இன்ன வகுப்பினர் இது காறுந்தான் செல்லுதல் வேண்டும் என் னும் நியதி ஆராய்ச்சி யனுபவங்கட்குச் சிறிதும் பொருந்தா தென்பதும், இடைக் காலத்தே நிகழ்ந்த அக் கொள்கை தானும் அக்காலத்திலேயே இருந்த அறிவுடைப் பெரியோர் பல ரால் நன்றாகக் கண்டிக்கப் பட்டதென் பதும், அவ்வாறு கண்டிக்காது ஒரு சில பெரியோர்கள் அக்கொள்கையின் வண் ணம் அக்காலத்தே யொழுகி வந்தன ரெனினும் அக்கொள்கை இக்காலத்தும் இருந்தே தீருதல் வேண்டும் என்பது முற்றிலும் தவறானதாகும் என்பதும், பிற இடங்களினும் ஆலயத்தின்கண் இறைவன் அருள் மிகுத்துத் தோன் றும் என்னும் கொள்கையினை யுடைய சைவராய் நாம் எல்லா உயிர்களும் அவ் வருளைப் பெற்றுய்ய விழைதல் வேண் டும் என்பதும், ஆறறிவுனுங் குறைந்த அறிவினையுடைய யானை பூசித்தது, எலி விளக்கேற்றியது, சிலந்தி பந்தரிட்டது, நாரை முத்தி பெற்றது என்று எழுந்த புராணங்களும் இக்கருத்தினையே வலி யுறுத்தா நிற்கும் என்பதும் நமக்குத் தெரிய வருகின்றன.

---

# தேவார ஆராய்ச்சி

[ஸ்ரீமான் சே. வெ. ஜம்புலிங்கம் பிள்ளை எழுதியது]

(134-ஆம் பக்கத் தொடர்ச்சி)

### சிறுத்தொண்டர்.

திருச்செங்காட்டங்குடித் திருப்பதி கத்தில் இவரைச் சிறப்பித்துக் கூறி யுள்ளார். ஒரு பதிகம் தனியாக இந்நாய னாரது திருத்தொண்டை விளக்குகிறது. அவற்றுள் ஒருபாடல் வருமாறு :—

கூரார விரைதேர்ந்து
குளமுலவி வயல்வாழும்
தாராவே மடநாராய்
தமியேற்கொன் றுரையீரே
சீராளன் சிறுத்தொண்டன்
செங்காட்டங் குடிமேய
பேராளன் பெருமான்றனருள்
ஒருநாட் பெறலாமே.

### முருகர்.

இந்நாயனாரது புஷ்ப கைங்கரியத் தைச் சிறப்பித்துத் திருப்புகலூர் வர்த்தமானீச்சரப் பதிகத்தில் இரண் டிடங்களில் கூறியுள்ளார். அவற்றுள் ஒருபாடல் பின் வருமாறு :—

ஈசனேறமர் கடவு
ளின்னமுதெந்தை யெம்பெருமான்
பூசுமாசில் வெண்ணீற்றர்
பொலிவுடைப் பூம்புகலூரில்
மூசுவண் டறைகொன்றை முருகன்
முப்போதுஞ் செய்முடிமேல்
வாச மாமலருடையார்
வர்த்தமா னீச்சரத்தாரே.

### நீலநக்கர்.

இந்நாயனார் வழிபாட்டின் சிறப் பைத் திருச்சாத்தமங்கைத் தேவாரத் தில் இரண்டு பாடல்களில் விதந்து கூறி யுள்ளார். அவற்றுள் ஒரு பாடல் வரு மாறு :—

பொடிதனைப் பூசுமார்பிற்
புரிநூலொரு பாற்பொருந்தக்
கொடியன சாயலா
ளோடுடனாவதுங் கூடுவதே
கடிமண மல்கிநாளுங்
கமழும்பொழிற் சாத்தமங்கை
அடிகள் நக்கன்பரவ
அயவந்தி அமர்ந்தவனே.

### குங்கிலியக் கலயர்.

இவரோடு திருக்கடவூரில் தங்கி யிருந்ததாகப் பெரிய புராண வாயிலாக அறிகிறோம். ஆனால் இவரைக் குறிக் கும் பாடல் அகப்படவில்லை.

### திருநீலகண்ட யாழ்ப்பாணர்.

இந்நாயனார் பொருட்டே தருமபுரத் தில் சம்பந்தரால் யாழ்மூரிப்பதிகம் அருளிச் செய்யப்பட்டது. இந்நாயனா ரைத் திருவாலவாய்த் தேவாரப் பதி கங்கள் ஒன்றில் குறிப்பித்துள்ளார்.

அப்பாடல் வருமாறு :—

நக்கமேகுவர் நாடுமோருருமே
நாதன் மேனியின் மாசுணமுருமே
தக்கபூமனைச் சுற்றக்கருளொடே
தாரமுய்த்தது பாணற்கருளொடே
மிக்கதென்னவன் தேவிக்கணியையே
மெல்லநல்கிய தொண்டர்க்கணியையே
அக்கினாமு துண்கலனோடுமே
ஆலவாயரனார் உமையோடுமே.

### நின்றசீர் நெடுமாறர்.

இவரே கூன் பாண்டியர். இவரது கூனைச் சம்பந்தர் தமது பாடலால் நிமிர்த்தி யருளினார். அப்பாடல் வரு மாறு :—

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரன் நாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.

பேரானந்த முற்றிருக்க முயன்றிருத்தல் கூடும். ஆனால், அவர் தம்மை இழிகுலத்தவர் என்று கருதினமையாலும், மனத்தினால் கோயில் கட்டினும் பிறப்பின் இழிவால் அக்கோயிலின் புறத்திருந்தே தொழுதல் வேண்டும் என்னும் கொள்கையுடையோராய் இருந்தமையாலும் அவ்வாறு புரிய விரும்பாது அந்தணர் பிறவியிலேயே அவாவுடையோராய் இருந்தார். திருநாளைப்போவார் அவ்வாறு கோயில் புறத்திருந்தே தொழுது வந்தமை பற்றியன்றோ ஸ்ரீசேக்கிழார் சுவாமிகள் அவர்தம் சரிதத்தைக் கூறத் தொடங்கும் போது,

"எயிலுடைத்தில்லை யெல்லையில்
நாளைப் போவாராஞ்
செயலுடைப் புறத்திருத்தொண்டர்
திறத்தினை மொழிவாம்"

எனக் கூறலாயினர்?

இதுகாறுங் கூறியவாற்றால் நாம் அறியக் கடவது யாதெனில் கடவுளுக்குக் குலவேற்றுமையில்லை என்பதும், குலம் கோத்திரம், பிறப்பு இறப்பு முதலிய யாவற்றினையுங் கடந்து நிற்கும் கடவுள் குலத்திற்குங் கோத்திரத்திற்கும் பெருமையளிப்பின் அஃது அப்பரம்பொருளின் முழுமுதற்றன்மைக்கு ஓர் பேரிழுக்காகுமென்பதும், இறைவன் அன்பினுக்கன்றியே வேறொன்றினுக்கும் அருளான் என்பதும், அன்பர் விரும்பும் எதனையும் அவன் அருளமுற்படுவான் என்பதும், சங்கிலியார் திருமணம், பரவையார்பால் சிவபெருமான் தூது சென்றமை முதலியன சுந்தரமூர்த்தி சுவாமிகளின் உள்ளக் கருத்தினைக் காட்டுமேயன்றி இறையவன் [illegible] சாரா என்பதும், அவ்வாறே திருநாளைப் போவார் தீக்குளித்து அந்தணராகி ஆலயஞ் சென்றது அவ்வன்பரின் கருத்தேயன்றி அரன் கருத்தன்றென்பதும், சிவபெருமான் எழுதியனுப்பியதாக வழங்கும் "பெற்றான் சாம்பானுக்குப் பேதமறத் தீக்கை செய்து முத்தி கொடுக்க முறை" என்னும் அருந்தமிழ்த் தொடரும் இக்கருத்தினையே வற்புறுத்தா நிற்கும் என்பதும் ஆகும்.

இறையவன் அவரவர் கருத்தின் வழியே சென்று அவரவர்க்கு அருள் செய்பவன் என்பதற்கு முற்றிலும் பொருத்தமான பிறிதோர் நிகழ்ச்சியை ஈண்டு ஆராய்வாம்.

சாக்கிய நாயனார் சமண சமயத்தில் இருந்த வண்ணம் சிவனை வழிபாடு செய்து முத்தியென்னும் முடிவில் இன்பத்தை அடைந்தார் என்பது அன்பர் பலருக்கும் தெரியவரும். திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகளின் காலத்தே சமண சமயத்திலே முனைந்து நின்ற கூன்பாண்டியன் சுவாமிகளின் அற்புதச் செயல்களால் சைவனாகிப் பின் நின்றசீர் நெடுமாற நாயனார் என்னும் சிறப்புப் பெயரும் பூண்டு அறுபான் மும்மை நாயன்மார்களுள் ஒருவராய் விளங்குதலையும் நாம் நன்கு அறிவோம். அவ்வாறே சம்பந்தமூர்த்தி சுவாமிகள், திருநாவுக்கரசு சுவாமிகள் இவர்கள் காலத்திலும், மணிவாசகப் பெருமான் காலத்திலும் எண்ணிறந்த சமணரும் புத்தரும் சைவராகித் தலைசிறந்து நின்றமை மேற்படியார் சரிதங்களால் தெரிய வருகின்றது. இஃது இவ்வாறிருக்க இயல்பிலேயே சைவராய்ப் பிறந்து, சைவராய் வளர்ந்து, இடையில் சமணராகி, ஆண்டும் இறைவன் திருவடியிலேயே ஈடுபட்டிருந்த நம் திருநாவுக்கரசு சுவாமிகள் தம்



தமக்கையாராய திலகவதியார்பால் திருநீறு பெற்றுச் சைவராகி, முழுநீறு பூசிய முனிவராய் விளங்கி, "நாம் யார்க்கும் குடியல்லோம் நமனை யஞ்சோம்" என்று இறைவனிடத்துள்ள அன்பின் பெருக்கால் இறுமாந்துரைத்துப் பல அற்புதங்களையும் நிகழ்த்திக் காட்டியும், தாம் சமண சமயத்தில் இருந்த குற்றம் நீங்க இடபக் குறியும் சூலக்குறியும் சிவபெருமானை வேண்டிப் பெற்றதோடு அமையாது, திருநல்லூரில் திருவடி தீட்சையும் பெற்றனர் எனில் அஃது இறைவன் கருத்தாகுமா? அவ்வாறாயின் நின்ற சீர் நெடுமாற நாயனார் முதலியோர் யாதோர் இடபக்குறி சூலக்குறிகளேனும், திருவடி தீட்சையேனுமின்றிச் சைவராகி முத்தியடைந்ததும், சாக்கிய நாயனார் சமண சமயத்திருந்தே முத்தியடைந்ததும் முறைமையாகுமா? ஆதலால் இறைவன் குலத்திற்கேனும் கோத்திரத்திற்கேனும் உயர்வு தாழ்வு கொடுப்பதில்லையென்பதும், "வேண்டுவார் வேண்டுவதே யீவான் கண்டாய்" என்னும் நாவுக்கரசரின் அமுதவாக்கின்படி அன்பர் விரும்பும் எதனையும் இன்புடன் அருள் புரிவான் என்பதும் விளங்குகின்றதல்லவா? அவ்வாறாயின் சிறிது காலத்திற்கு முன்னிருந்த ஆறுமுக நாவலர் தாம் வெளியிட்ட திருத்தொண்டர் புராணத்தின்கண், திருநாளைப் போவார் சரிதச் சூசன உரையில் அவரவர் தத்தம் வருணாச்சிரம முறைமையில் நின்று ஒழுகுதல் வேண்டும் என்றும், திருநாளைப்போவார் அவ்வாறு தவறாது ஒழுகினமையால் தான் சிவபெருமான் அவர்க்கு அருள் புரிந்தாரென்றும் கூறியிருத்தலின் காரணம் யாதெனின், அக்காலத்தே நம் நாட்டில் பெரிதும் பரவியிருந்த வருணாச்சிரமக் கொள்கையில் நமது நாவலரவர்களும் ஈடுபட்டிருந்த காரணத்தால் அவ்வாறு கூற நேர்ந்ததேயன்றி அது சைவசித்தாந்தக் கொள்கையில் ஒன்றாகாது என்பதற்குக் கண்ணப்பர் சிவபெருமானைத் தொட்டுப் பூசை செய்தமையும், நீலநக்கர், பாணனார் படுத்துறங்க, வேதியின் அருகே இடந்தந்தமையும், அப்பூதியடிகள் நாவுக்கரசருடன் உண்டமையுமே போதிய சான்றுகளாகும். ஆயின்,

"புறச்சமய நெறிநின்றும்
அகச்சமயம் புக்கும்
புகன்மிருதி வழியுழன்றும்
புகலுமாச்சிரம
அறத்துறைக ளவையடைந்தும்
அருந்தவங்கள் புரிந்தும்
அருங்கலைகள் பலதெரிந்தும்
ஆரணங்கள் படித்துஞ்
சிறப்புடைய புராணங்க
ளுணர்ந்தும் வேதச்
சிரப்பொருளை மிகத்
தெளிந்துஞ் சென்றால்சைவத்
திறத்தடைவ ரிதிற்சரியை
கிரியா யோகஞ்
செலுத்தியபின் ஞானத்தாற்
சிவனடியிற் சேர்வர்."

என்றும்,

"நரர்பயில் தேயந் தன்னில்
நான்மறை பயிலா நாட்டில்
விரவுதல் ஒழிந்து தோன்றல்
மிக்க புண்ணியத்தான் ஆகும்
தரையினில் கீழைவிட்டுத்
தவஞ்செய் சாதியினில் வந்து
பரசமயங்கட் செல்லாப்
பாக்கியம் பண்ணொணாதே"

என்றும் நம் சைவசித்தாந்த சாத்திரங்களில் ஒன்றாய சிவஞான சித்தியாரில் கூறியிருத்தலின் நோக்கம் யாதெனில் அவை சைவசித்தாந்த நிலை

இவரைக் குறிக்கும் வேறு பாடலாவது :—

ஆற்றலடல் விடையேறும்
ஆலவாயான் திருநீற்றைப்
போற்றிப் புகலிநிலாவும்
பூசுரன் ஞானசம்பந்தன்
தேற்றித் தென்னனுடலுற்ற
தீப்பிணியாயின தீரச்
சாற்றிய பாடல்கள் பத்தும்
வல்லவர் நல்லவர் தாமே.

## குலச்சிறை நாயனார்.

இந்நாயனாரது திருத்தொண்டைச் சிறப்பித்துத் தனியாக ஒரு திருப்பதிகம் பாடியுள்ளார். அப்பதிகத்தில் ஐந்து திருப்பாடல்கள் இவரது சிவபத்தியை எடுத்துக் காட்டுகின்றன. அவற்றில் ஒரு பாடல் வருமாறு :—

கணங்களாய் வரினுந் தமியராய்
வரினுமடியவர் தங்களைக்கண்டால்
குணங்கொடு பணியுங் குலச்சிறை
குலாவு கோபுரஞ்சூழ் மணிக்கோயில்
மணங்கமழ் கொன்றை வாளரா
மதியம்வன்னி வண்கூவிளமாலை
அணங்குவீற் றிருந்த சடைமுடி
யண்ணல் ஆலவாயாவதுமிதுவே.

## மங்கையர்க்கரசியார்.

சைவசிகாமணியாகிய இவ்வம்மையாரைப் பல விடங்களில் பாராட்டிக் கூறியுள்ளார். இவ்வம்மையார் குலச்சிறையாருக்குத் துணைநின்று அவரோடு சைவ சமயத்தை ஓம்பி வந்தாராகலின் இவரையும் குலச்சிறையாரையுஞ் சேர்த்து ஒரு திருப்பதிகத்தில் விதந்து பாராட்டியுள்ளார். அவற்றுள் பின்வரும் பாடல் அம்மையாரது சைவத் திருக்கோலத்தை உள்ளபடி உருவகப்படுத்துகின்றது:—

முத்தின் தாழ்வடமுஞ் சந்தனக்
குழம்புநீறுந் தன்மார்பினில் முயங்கப்
பத்தியார்கின்ற பாண்டிமாதேவி
பாங்கொடு பணிசெயநின்ற
சுத்தமார்பளிங்கின் பெருமலையுடனே
சுடர்மரகதம் அடுத்தாற்போல்
அத்தனுருமையோ டின்புறுகின்ற
ஆலவாயாவது மிதுவே.

தமது காலத்திற்கு முன்னர் விளங்கிய சில நாயன்மார்களையும் தமது பாடல்களில் ஆங்காங்கே குறிப்பித்துள்ளார். அவராவார்,— சண்டேசுரர், கண்ணப்பர், நமிநந்தியடிகள், கோச்செங்கட் சோழர், புகழ்த்துணையார் முதலியோர். இந்நாயனார்களைக் குறிக்கும் பாடல்கள் கீழே காட்டப்படுகின்றன.

## சண்டேசுரர்.

சண்டேசுரர் பிறந்த தலமாகிய திருச்சேய்ஞலூர்ப் பதிகத்தில் இந்நாயனாரது மகிமையைப் பற்றிக் கூறியுள்ளார். இன்னும் பல விடங்களிலும் பாராட்டியுள்ளார். திருச்சேய்ஞலூர்ப் பாடல் வருமாறு :—

பீரடைந்த பாலதாட்டப்
பேணுதவன் தாதை
வேரடைந்து பாய்ந்ததாளை
வேர்த்தடிந்தான் றனக்குத்
தாரடைந்த மாலைசூட்டித்
தலைமை வகுத்ததென்னே
சீரடைந்த கோயில்மல்கு
சேய்ஞலூர் மேயவனே.

## கண்ணப்பர்.

திருக்காளத்திப் பதிகத்தில் அன்பிற்கு உதாரணமாகிய இந்நாயனாரை ஓரிடத்தில் குறிப்பித்துள்ளார். அப்பாடல் :—

வேயனையதோளுமையோர் பாக
மதுவாக விடையேறி சடைமேல்
தூயமதிசூடி சுடுகாடி னடமாடி
மலைதன்னை வினவில்
வாய்கலசமாக வழிபாடுசெயும்
வேடன் மலராகுநயனம்
காய்கணையினு லிடந்தீசனடி
கூடுகாளத்தி மலையே.



## நமிநந்தியடிகள்

இந்நாயனார் பூசையின் சிறப்பைத் திருக்கோளிலிப் பதிகத்தில் பாராட்டியுள்ளார். அப்பாடல் :—

தாவியவ னுடனிருந்துங்
காணுத தற்பரனை
ஆவிதனி லஞ்சொடுக்கி
யங்கணனென் றாதரிக்கும்
நாவியல்சீர் நமிநந்தி
யடிகளுக்கு நல்குமவன்
கோவியலும் பூவெழுகோற்
கோளிலி யெம்பெருமானே.

## கோச்செங்கட் சோழர்

இந்நாயனாரைப் பலவிடங்களில் குறிப்பித்துள்ளார். அவற்றுள் ஒரு பாடல் ஈண்டுக் குறிப்பிடுவாம் :—

## திருவம்பர்ப் பெருந்திருக்கோயில்

எரிதர வனல்கையி லேந்தி யெல்லியில்
நரிதிரி கானிடை நட்ட மாடுவார்
அரிசிலம் பொருபுன லம்பர் மாநகர்க்
குரிசில் செங்கண்ணவன் கோயில் சேர்வரே.

## புகழ்த்துணை நாயனார்

இந்நாயனார் பொருட்டுச் சிவபெருமான் தினந்தோறும் படிக்காசு கொடுத்தருளிய திறத்தை அரிசிற்கரைப்புத்தூர்த் தேவாரத்தில் குறிப்பித்துள்ளார். அப்பாடல் :—

நிலந்தணீ ரோடனல்கால்
விசும்பி னீர்மையான்
சிலந்தி செங்கட்
சோழனாகச் செய்தானூர்
அலந்த வடியானற்றைக்
கன்றோர் காசெய்திப்
புலர்ந்த காலைமாலை
போற்றும் புத்தூரே.

## காரைக்காற் பேயார்

சம்பந்தர் திருவாலங்காட்டுக்குத் தரிசனத்தின் பொருட்டுச் சென்றபோது அத்தலம் காரைக்காலம்மையார் தலையாலே நடந்து சென்ற மகிமை வாய்ந்ததென்றுகருதி அதை மிதித்தற்குத் தானும் அஞ்சி அடுத்த வூரிலிருந்தே வணங்கிச் சென்றாரென்று பெரிய புராணங்கூறும். இதனால் காரைக்காலம்மையார் நாயனாருக்கு முற்பட்டவரென்று பெறப்பட்டது. ஆயினும் அவரைக்குறித்துத் தமது பாடல்களில் யாண்டுங் கூறிற்றிலர். அவரைப்பற்றிக் கூறிய பாடல்கள் இறந்துபோயிருக்கலாமென்று எண்ணக் கிடக்கின்றது.

இரண்டாவதாக, அப்பர் சுவாமிகள், அருளிச் செய்த தேவாரப் பதிகங்களை ஆராய்வாம். அப்பர் தேவாரப் பதிகங்களின் மொத்த எண் 4,900. அவற்றில் இப்போது வழங்கப் பெறுவன 311. தலங்களைக் குறிப்பன 125. பொதுப்பதிகங்கள் 186. இப்பதிகங்கள் சைவத் திருமுறையில் நான்கு ஐந்து ஆறுவது திருமுறையாக வகுக்கப்பெற்றுள்ளன. இப்பாடல்கள் ஓசை யின்பமும் பத்திச் சுவையும் ஒருங்கே அமையப்பெற்றன. படிப்போருக்கு வேதோபநிடதசாரமாய்ப் பிரபஞ்ச வெறுப்பும் சிவஞான விருப்பும் உண்டாக்கி, கேட்போர் மனதை இரங்கப் பண்ணக் கூடியின. தாண்டகங்களும் திருக்குறுந் தொகைகளும் இவர் பாடல் வகையிற் சிறப்புற்றன. இயற்கை அழகைச் சிவபரமாக வர்ணித்துப் பாடுவதில் இவர் தம் பாடல்களுக்கு இணையில்லை. இவருடைய பதிகம் ஒவ்வொன்றும் பத்துத் திருப்பாடல்களைக்கொண்டது. ஒவ்வொரு பதிகத்தின் ஈற்றிலும் அதாவது பத்தாவது பாசுரந்தோறும் கொடியனாகிய இராவணனுக்குச் சிவபெருமான் அருள்புரிந்த திறத்தைப் பாராட்டிக் கூறுவர். திருமறைக்காட்டுத் தேவாரப் பதிகம் ஒன்றில் எல்லாப் பாசுரங்களிலும் இராவணனைப் பற்றிக் கூறுகின்றனர். சில பதிகங்களில் சைனத்தின் தாழ்வையும் அப்பரசமயத் தலைமை பூண்டு, தாம் இல காலம் ஊழ் வலியால் உழன்றமையும் பிறகு சற்சமயமாகிய சைவ சமயத்தை அடைந்த முறைமையும் மிகை படக் கூறுவர். சில பதிகங்களிலே சைனர்கள் தமக்குச் செய்த

வஞ்சனையைக் குறிப்பித்துள்ளார். சில பாடல்களிலே அவர்கள் அநாசாரங்களையும் கொள்கைகளையும் இழித்துக் கூறுவர். சில பாடல்கள் நாயகி நாயக பாவனையில் அமைத்துப் பாடப்பெற்றுள்ளன. இங்ஙனம் பாடல் சிவன் முத்தர்க் கியல் பன்றோ? நாயனாரிடம் விளங்கிய அற்புதங்கள் பல. அவற்றுள் பல அவர் தம் திருப்பாடல்களாலேயே நிரூபிக்கற்பாலன. அவர் நிகழ்த்திய அற்புதங்களில் முக்கிய மானவையும் அவற்றிற்கு ஆதாரமும் பின் வருமாறு :—

(1) சமண சமயத்திலிருந்து கரையேற்றப்பட்டுச் சூலை நோயினால் தடுத்தாளப் பெற்றது. பிரமாணம் :—

1. சூலைதீர்த்தடி யேனை
யாட் கொண்டாரே
2. சமண்டீர்த் தென்றன்னை
யாட் கொண்டார்தாமே.
3. வெஞ்சொற் சமண்சிறையி
லென்னை மீட்டார்
4. திருந்தா வமணர்தந்
தீநெறிப்பட்டுத் திகைத்துமுத்தி
தருந்தா ளிணைக்கே
சரணம் புகுந்தேன்.

(2) சமணர்களாலே ஏழுநாள் சுண்ணாம்பறையிலே பூட்டப்பட்டிருந்தும் வேவாது பிழைத்தது. பிரமாணம் :—

மாசில் வீணையு மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசுவண்டறை பொய்கையும் போன்றதே
ஈசனெந்தை யிணையடி நீழலே.

(3) நஞ்சுகலந்த பாற்சோற்றை உண்டுஞ் சாவாது பிழைத்தது. பிரமாணம்:-

வஞ்சனைப் பாற்சோறாக்கி
வழக்கிலா வமணர்தந்த
நஞ்சமு தாக்குவித்தார்
நனிபள்ளி யடிகளாரே.

(4) கொலை செய்யானையினால் வலஞ்செய்து வணங்கப் பட்டது. பிரமாணம் :—

கெடிலப் புனலுமுடையா
ரொருவர் தமர்நாம்
அஞ்சுவது யாதொன்றுமில்லை
அஞ்ச வருவதுமில்லை

(5) கல்லிலே சேர்த்துக் கடலிலே இட்டபோது அக்கல்லே தோணியாகக் கரையேறினது. பிரமாணம் :—

1. கற்றுணைப் பூட்டியோர்
கடலிற் பாய்ச்சினும்
நற்றுணையாவது நமச்சிவாயவே.
2. கல்லினோ டெனைப் பூட்டியமண்கையர்
ஒல்லை நீர்புக நூக்க என்வாக்கினால்
நெல்லு நீள் வயல் நீலக்குடி யான்
நல்லநாம நவிற்றி யுய்ந்தே னன்றே.

(6) திருவீழி மிழலையிற் படிக்காசு பெற்றது. பிரமாணம் :—

பாந்தபாரிட மூரிடைப் பலி
பற்றிப் பார்த்துணுஞ்சுற்ற மாயினீர்
தெரிந்த நான்மறை யோர்க்
கிடமாய திருமிழலை
இருந்து நீர்தமிழோ டிசைகேட்கு
மிச்சையாற்காசு நித்தனல்கினீர்
அருந்தண் வீழி கொண்டீ
ரடியேற்கு மருளுதிரே.

என்பது சுந்தரர் தேவாரம்.

(7) வேதாரணியத் திருக்கதவு திறக்கப் பாடினது. பிரமாணம் :—

பண்ணினேர் மொழியாளுமை பங்கரோ
மண்ணினார் வலஞ்செய் மறைக் காடரோ
கண்ணினா லுமைக் காணக் கதவினைத்
திண்ணமாகத் திறந்தருள் செய்ம்மினே.

திறக்கப் பாடிய வென்னினுஞ் செந்தமிழ்
உறைப்புப்பாடி யடைப்பித்தாருண்ணின்றார்.

—திருவாய்மூர் திருக்குறுந்தொகை 2.

(8) விஷத்தினால் இறந்த பிராமணப் பிள்ளையை உயிர்ப்பித்தது.

இதற்குப் பிரமாணம் அப்பூதியடிகள் சரிதம் பார்க்க.

(9) காசியிலே ஒரு தடாகத்திலே முழுகித் திருவை யாற்றில் தோன்றியது.

இதனைக் குறிப்பிக்கும் ஐதிக உற்சவம் திருவையாற்றிலே பிரதி ஆடி அமாவாசை தோறும் நடந்தேறி வருகின்றது.

இனி! அப்பர் தேவாரங்களிற் பிற நாயன்மார்களைப் பற்றிக் கூறுவனவற்றைக் கவனிப்பாம். சம்பந்தர்,



அப்பூதியடிகள், சிறுத்தொண்டர், முருகர், குங்கிலியக்கலயர், நீலநக்கர் முதலியோர் நாயனார் காலத்திலே விளங்கியதாகப் பெரிய புராணங் கூறும். பிற நாயன்மார்களைப் பற்றிய தேவாரங்களாவன :—

### சம்பந்தர்

கழுமல வூரார்க்கம்பொன் ஆயிரங்கொடுப்பர் போலும் ஆவடுதுறை யனாரே.

### சண்டேசுரர்

(1) ஆமலிபாலு நெய்யு
மாட்டியர்ச்சனைகள் செய்து
பூமலிகொன்றை சூட்டப்
பொறாத தன்றாதைதாளைக்
கூர்மழு வொன்றாலோச்சக்
குளிர்சடைக் கொன்றைமாலைத்
தாமநற் சண்டிக்கீந்தார்
சாய்க்காடு மேவினாரே.

தழைத்ததோ ராத்தியின்கீழ்த்
தாபர மண்ணிற்கூப்பி
அழைத்தங்கே யாவின்பாலைக்
கறந்து கொண்டாட்டக்கண்டு
பிழைத்த தன்றாதைதாளைப்
பெருங்கொடு மழுவால்வீசக்
குழைத்த தோராமுதமீந்தார்
குறுக்கை வீரட்டனாரே.

### சாக்கியர்

(1) "புத்தன் மறவாதோடி யெறிசல்லி புதுமலர்க ளாக்கினான்காண்" திருவீழிமிழலைத் தேவாரம்.

(2) கல்லினாலெறிந்து கஞ்சிதா
முணுஞ் சாக்கியனார்
நெல்லினார் சோறுணாமே
நீள்விசும் பாளவைத்தார்
எல்லியாங் கெரிகையேந்தி
யெழிறிகழ் நட்டமாடிக்
கொல்லியாம் பண்ணுகந்தார்
குறுக்கை வீரட்டனாரே.

### கண்ணப்பர்

(1) குவப்பெருந் தடக்கைவேடன்
கொடுஞ்சிலை யிறைச்சிப்பாரக்
துவர்ப்பெருஞ் செருப்பானீக்கித்
தூயவாய்க் கலசமாட்ட
உவப்பெருங் குருதிசோர
வொருகணை யிடந்தங்கப்பத்
தவப்பெருந்தேவு செய்தார்
சாய்க்காடு மேவினாரே.

(2) காப்பதோர் வில்லுமம்புங்
கையதோ ரிறைச்சிப்பாரம்
தோற்பெருஞ் செருப்புத் தொட்டுத்
தூய வாய்க்கலசமாட்டித்
தீப்பெருங் கண்கள்செய்ய
குருதிநீரொழுகத் தன்கண்
கோப்பதும் பற்றிக்கொண்டார்
குறுக்கை வீரட்டனாரே.

(3) கண்ணப்பர் பணியுங்கொள் கபாலியாரே.

—தனித்திருத்தாண்டகம்.

(4) கண்ணப்பர்க் கருள்புரியுங்காளை கண்டாய். —மழபாடி.

### அப்பூதியடிகள்

அழகோம்பு மப்பூதி குஞ்சிப் பூவாய்நின்ற சேவடியாய் கோடியையே. —பழனம்.

### கோச்செங்கட்சோழர்

(1) அரணிலா வெளிய
நாவலரு நிழலாகவீசன்
வரணியலாகித் தன்வாய்
நூலினாற் பந்தர்செய்ய
முரணிலாச் சிலந்திதன்னை
முடியுடை மன்னனாக்கித்
தரணிதானாள வைத்தார்
சாய்க்காடு மேவினாரே.

(2) சிலந்தியு மானைக்காவிற்
றிருநிழற் பந்தர்செய்து
உலந்தவ ணிறந்தபோதே
கோச்செங்க ணனுமாகக்
கலந்தநீர்க் காவிரிசூழ்
சோணாட்டுச் சோழர்தங்கள்
குலந்தனிற் பிறப்பித்திட்டார்
குறுக்கை வீரட்டனாரே.

### கணம் புல்லர்

அணங்குமை பாகமாக
வடக்கியவாதி மூர்த்தி
வணங்குவாரிடர் கடீர்க்கு
மருந்து நல்லருந்தவத்த
கணம்புல்லர்க் கருள்கள்
செய்துகாதலா மடியார்க்கென்றும்
குணங்களைக் கொடுப்பர் போலுங்
குறுக்கை வீரட்டனாரே.

### நமி நந்தி

(1) நந்தி பணிகொண்ட ருளும்நம்பன்
றன்னை.

—ஆரூராநெறித் திருத்தாண்டகம்.

(2) ஆராய்ந்தடித் தொண்டா
ராணிப்பொன் னூரகத்தடக்கிப்
பாரூர்பரிப்பத் தம்பங்குனி
யுத்திரம் பாற்படுத்தான்
ஆரூர்நறுமலர் நாதனடித்
தொண்டனம்பி நந்தி
நீராற்றிருவிளக் கிட்டமை
நீணாடறியு மன்றே.

—திருவாரூர்த்திருவிருத்தம்.

அமர் நீதி

நாட்கொண்ட தாமரைப்பூந்
தடஞ்சூழ்ந்த நல்லூரகத்தே
கீட்கொண்ட கோவணங்
காவென்றுசொல்லிக் கிழிபடத்தான்
வாட்கொண்ட நோக்கிமனைவியொடு
மங்கோர் வாணிகனை
ஆட்கொண்ட வார்த்தையுரைக்கு
மன்றோ விவ்வகலிடமே.

—திருநல்லூர்த் தேவாரம்.

அரிவாட்டாயர்

கரும்பு பிடித்தவர் காயப்பட்
டாரங்கோர் கோடவியால்
இரும்பு பிடித்தவரின் புறப்
பட்டாரிவர் கணிற்க.

திருவாரூர்த் தேவாரம்.

மற்றவை விரிவஞ்சி விடப்பட்டன.

# பூவாளூர் சைவசித்தாந்த சங்கத் தீர்மானங்கள்

பிரபவஹு பங்குனிமீ 27உ பூவாளூர் சைவசித்தாந்த சங்கத்தின் 18-வது ஆண்டு விழாவில் திருவாளர் - ச. சச்சிதானந்தம் பிள்ளை, பி. ஏ. எல். டி. Deputy Inspector of Schools அவர்கள் தலைமையில் கூடிய சைவத் திருக்கூட்டத்தார் சமயவளர்ச்சி கருதிச் செய்வித்த முடிவு (தீர்மானங்)கள் :—

1. எல்லாச் சிவாலயங்களிலும், பூசகர்கள் சிவாகமப்படி சமய, விசேட, நிர்வாண, தீக்கைகளும் ஆச்சாரிய அபிடேகமும் முறையே பெற்று இல்லறவொழுக்க முடையவர்களாக விருக்கும்படிக்கும், இதுபோது அவ்வாறில்லாத கோவில்களில், கோவில் செலவிலேயே ஆசாரிய அபிடேகம்வரை செய்து வைத்தே பூசை செய்விக்கும்படிக்கும், கோவில் ஆட்சியாளர்களை (டிரஸ்டிகள்) யும், தேவஸ்தானக் கமிட்டியார்களையும், இந்துமத பரிபாலன போர்டார்களையும், சைவ மடாதிபதிகளையும் இக்கூட்டம் கேட்டுக் கொள்ளுகிறது.

2. எல்லாச் சிவாலயங்களிலும், பரிசாரகம், சுயம்பாகம் முதலிய உதவிப் பணி புரிவோர் சைவரல்லாத வேறு சமயத்தினைச் சார்ந்த ஸ்மார்த்தர்களாகவே இருப்பது சிவாகம விரோதமாதலின் அப் பணியாளர்களுக்குக் கோவில் செலவில் தீக்கை செய்வித்து சைவநெறியாளராகப் பணி செய்யச் செய்விக்கும்படி இக்கூட்டம், ஆட்சியாளர் கமிட்டி போர்டு மடாதிபதிகள் இவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறது.

3. எல்லாப் பணியாளர்களும் சைவசீலராகவும், சிவாகம முறைப்படி சிவதீக்கை பெற்றவர்களாகவும், இருக்கவேண்டியதே முறையாதலால், புட்பப் பணி, தீபப்பணி, வாத்தியப்பணி முதலிய பணிகளைச் செய்யவும் எல்லாப் பணியாளர்கட்கும் சிவ தீக்கை செய்வித்துச் சைவ சீலராகவிருக்கக் கவனித்து வரும்படிக்கு இக்கூட்டம் மேற்கண்டவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறது.

4. கோவில் பணிபுரியும், பூசகர்கள், சுயம்பாக்கள் பரிசாரகர்கள் முதலிய உதவியாளர் தவிர எவரும் எந்தவிதமான சலுகையைக் கொண்டும், எக்காலத்திலும், சமய விரோதமாகக் கருப்பக் கிருகம் அர்த்த மண்டபம் இவைகளுக்குள் போகக்கூடாதெனத் தடுத்து அவர்கள் மகா மண்டபத்திலேயே இருந்து முறைப்படி வணங்கிச் செல்ல



ஏற்பாடு செய்விக்கும்படி இக்கூட்டம் கேட்டுக்கொள்ளுகிறது.

5. சிவாகமப்படி யமைக்கப் பெற்றும், பூசை செய்யப்பெற்றும் வருகிற சிவாலயங்களில், சைவரல்லாத ஸ்மார்த்தப் பார்ப்பனப் பெண்களும், விதவைகளும், கருப்ப கிருஹத்திற்குள் சென்று, அபிடேகத்திற்குத் தண்ணீர் கொண்டு விடுவதும், நந்தி முதலிய உருவங்களை (பிம்பங்களை)த் தொட்டு அபிடேகம், அர்க்கியம் செய்வதும், அதனை ஆதி சைவர்களான பூசகர்களிருக்க ஸ்மார்த்த சாஸ்திரிகளென்போர் செய்து வைப்பதும் சமய விரோதமாதலின், இத்தகைய செய்கைகளை நீக்குவிக்கும்படி இக்கூட்டம் கேட்டுக் கொள்ளுகிறது.

6. சிவாலயங்களிலே சைவரல்லாத ஸ்மார்த்தர்களின் வீட்டில் செய்வித்த பொங்கல், வடை, பாயசம் முதலானவைகளைக் கொண்டுவந்து படைக்க, அதனை நிவேதனஞ் செய்விப்பது சமய விரோதமாதலால், இத்தகைய செய்கைகள் நடைபெறும் கோவில்களில் அதனை நிறுத்தச் செய்யும்படி இக்கூட்டம் கேட்டுக்கொள்ளுகிறது.

7. பெரும்பாலான சைவ, வைணவக் கோவில்களில் தெரிசனம் செய்ய வருகிற பக்தர்களிடம் கட்டாயப்படுத்தி உண்டியில் குறிப்பிட்ட தொகைகளைப் போட்டுத்தான் உள்ளே போகவேண்டுமென வற்புறுத்துவது, சுங்கம் கேட்பது போன்றதாயும், சமயக் கொள்கைக்கு விரோதமாயும், காசில்லாத அன்பர்களைத் தெரிசனம் செய்யாது தடுப்பதாயு மிருப்பதால் அதனை நிறுத்திவிட்டு உண்டி இருக்குமிடங்களில் இஷ்டப்பட்டவர்கள் தொகைகளைப் போடவேண்டும் எனப் போர்டு போடுவதோடு, கட்டாயப்படுத்தாமலிருக்கும்படி காவலாளர்கட்கு உத்தரவு செய்விக்கச் செய்யும்படி இக்கூட்டம் கேட்டுக்கொள்ளுகிறது.

8. தாசிகள், உருத்திர கணிகைகள் என்போர் இதுபோது பண்டைக்கால அற நெறியினின்றும் வழுவி விபசாரத் தொழில் செய்பவர்களாக மாறி விட்டமையாலும் இந்நிலையில் பணி செய்ய எந்த ஆகம விதிகளும் இடந்தராமையாலும் அதனால் பெருங் கேடு விளைவதாகவு மிருப்பதால் கோவில் பணிபுரிதலினின்றும் அவர்களை அறவே நீக்கிவிடும்படியும், அப் பணிக்கென மானியங்களிருந்தால், அதனை அவர்களுக்கே கொடுத்துவிடும்படி செய்விக்க வேணுமாயும் இக்கூட்டம் கேட்டுக் கொள்ளுகிறது.

9. எல்லாம்வல்ல சிவபெருமானை முழுமுதற் கடவுளாகக் கொண்ட சிவாலயங்களிலே, ஆண்டவனை இரதத்தில் (தேரில்) ஏற்றிவிட்டு, தேரடிக் கருப்புச்சாமிக்கு ஆடு வெட்டினால்தான் தேரோடுமென, ஆலயச் செலவில் கொலை பாதகச்செயல் புரிவது அப்பெருமானிலக்கணங்களை நம்புகிற முறைக்குத் தவறாகவும், சமயக் கொள்கைக்கே விரோதமாகவும், கல்வியறிவில்லாத பாமர மக்களை இத்தகைய சிறு தெய்வ வழிபாட்டையும், கொலை பாதகச் செயல்களையுஞ் செய்யத் தூண்டி, வேறு கொலைகட்குச் சமாதானஞ் செய்துகொள்ள ஏதுவாகவு மிருப்பதால் இக்கொடுஞ் செயல்களை உடனே நீக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறது.

10. பிறவியினால் மட்டும் உயர்வையோ தாழ்வையோ கற்பிக்காமல் அப்பர் சுவாமிகள் "எவரேனுந் தாமாக விலாடத்திட்ட திருநீறுஞ் சாதனமுங் காண்டாலுள்கி" என்ற திருத்தாண்டகத்திலே இட்டிருக்கிற ஆணையின்படி சைவ சீலம் வாய்ந்து, அன்பும் ஒழுக்கமும், சைவ உணவு முதலியனவும் கைக்கொண்டு சிவ தீக்கைச் செந்நெறி நிற்பார் யாவரேனும், அவர்களுக்கு அவர்களோடு உடனுண்ணல் முதலிய சம மரியாதை அளித்தல் சமய வளர்ச்சிக்கு இன்றியமையாததென இக்கூட்டம் முடிவு செய்கிறது.

11. சைவரல்லாத எவரும் சைவ சமய உயர்வையுணர்ந்து அந்நெறியொழுக விரும்பின், சைவர்கள் அப்பர் சுவாமிகளை எடுத்துக் காட்டாகக் கொண்டு, அவர்களை அன்போடு வரவேற்றுத் தம் சமய உரிமைகள் யாவற்றையும் மனமுவந்து அளிக்கவேண்டுமென எல்லாச் சைவ மக்களையும் இக்கூட்டம் கேட்டுக்கொள்ளுகிறது.

12. சைவர்கள், தாங்கள் செய்யும் எல்லாச் சுப அசுபச் சடங்குகளையும் சைவரல்லாத ஸ்மார்த்த, வைணவ புரோகிதர்களைக் கொண்டு செய்விப்பது சமய விரோதமாதலால், சைவ சீலர்களைக் கொண்டே செய்விக்கும்படி இக்கூட்டம் எல்லாச் சைவப் பெருமக்களையுங் கேட்டுக்கொள்ளுகிறது.

13. ஆலய பூசை நடைமுறையிலே திருநெல்வேலி ஜில்லா தென்காசி முதலிய கோவில்களில் சைவரல்லாத ஸ்மார்த்தர்கள் வடமொழி வேதம், சாஸ்திரம் முதலியன பாடித் தங்களினத்தவர்கட் கெல்லாம் திருநீறளித்த பிறகே, தேவாரத் திருமுறை படித்துச் சைவர்களுக்குத் திருநீறு அளிக்க வேண்டுமெனத் தார்க்கஷியாடிய வழக்கு நியாயமன்றத்திலே, சைவர்கள் பக்கமே தீர்ப்பானதையும், அவ்வுரிமை பெற உழைத்த பெரியார்களையும் பாராட்டி எல்லா ஆலயங்களிலும், சைவ சீலர்களைக் கொண்டு பண்முறை தவறாது திருமுறைகளை யோதிய பின்பே எல்லோருக்கும் திருநீறளிக்கும்படி செய்விக்க வேண்டுமென இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

14. வேதமென்ற பெயரினைப் பயன்படுத்திச் சைவசமயக் கொள்கையான அன்பு நெறிக்கே முற்றிலும் மாறுபட்டு உயிர்க்கொலை செய்தும், மதுபானம், பௌண்டரீகம் போன்ற ஒவ்வா நெறி வழி பற்றியும், ஸ்மார்த்தப் பார்ப்பனர்கள் செய்யும் யாகச் சடங்குகளுக்குச் சைவ மக்கள், மனம் வாக்குக் காயங்களாலும், பொருளாலும், எவ்வித வுதவியும், செய்யாதிருக்கும்படி இக்கூட்டம் கேட்டுக்கொள்ளுகிறது.

15. சைவ மக்கள் நமது சமயாசிரியரான, அப்பர் சுவாமிகள் "சென்று நாம் சிறு தெய்வஞ் சேர்வோமல்லோம்" எனத் தெளிவாய்ச் சொல்லியிருப்பதனை நினைவுக்குக் கொண்டு வராமலே கருப்பன் முதலான சிறு தெய்வங்களைச் சமய நெறிக்கு மாறாக வணங்கியும், அறிஞர்களால் வெறுத்தொதுக்கப்பட்ட, உயிர்க்கொலை செய்தும், மது, சுருட்டு, கஞ்சா முதலியவைகளைப் பூசாரிகளின் புரட்டுகளை அறியாது படைத்துப் பயன்படுத்தியும், வருவதை அறவே விட்டொழிக்க வேண்டுமென இக்கூட்டத்தார் கேட்டுக் கொள்ளுகிறார்கள்.

16. தமிழ் நாட்டிலே சிவாலயங்களே பெரும்பாலும் அதிகமாக விருத்தலால், ஒவ்வொரு தாலுக்கா, தேவஸ்தானக் கமிட்டிகளிலும் குறைந்தது 5-ல் 3 பேர் சைவ சமயத்தைச் சேர்ந்தவர்களாகவே, இருந்து வரும்படி செய்ய வேண்டுமென, இந்துமத தேவஸ்தான போர்டார்களை இக்கூட்டம் கேட்டுக் கொள்ளுகிறது.

17. ஒவ்வொரு சிவாலயங்களிலும் நியமிக்கப்படும் (டிரஸ்டிகள்) ஆட்சியாளர்கள் எல்லாம், சமயப்பற்று, வாய்ந்தவர்களாயும், சமய நூலாராய்ச்சி செய்தவர்களாயும், இருக்க வேண்டுமெனவும் அது போன்றே எல்லா விஷ்ணுவாலயங்களுக்கும் சமயப்பற்றும் ஆராய்ச்சியு முள்ளவர்களையே, நியமிக்கும் படியும் தேவஸ்தானக் கமிட்டிகளையும், போர்டார்களையும் இக்கூட்டம் வற்புறுத்திக் கேட்டுக்கொள்ளுகிறது.

18. தமிழ் நாட்டிலுள்ள ஒவ்வொரு சைவசித்தாந்த சபையும், தங்களுக்குச் சமீபமாகவுள்ள கோவில்களுக்கு (டிரஸ்டிகள்) ஆட்சியாளர் நியமிக்கும் போது போதிய சிரத்தை எடுத்துக் கொள்வதோடு கோவில்களில் நடைபெறும்



திருவிழாக் காலங்களிலெல்லாம் சமய உண்மைகளையும், திருவிழாக்களின் தத்துவங்களையும், உடல் நலம்பேணும் முறைகளையும், கோவில் குளம் முதலியவற்றைப் போற்றும் முறைகளையும், மக்களுக்குள் பரப்புவதற்கும், கோவில்களெல்லாம் சைவர்களுக்கே உரியனவென்பதை விளக்கவும், ஏற்ற எல்லா முயற்சிகளையும் உடனே எடுத்துக் கொண்டு சீர்திருத்த முயலவேண்டுமென இக்கூட்டம் கேட்டுக் கொள்ளுகிறது.

19. சைவசமயக் கொள்கையான கருணையைச் செயலில் காட்டுவதன் அறிகுறியாகவும், தேச நலத்துக்கின்றியமையாத பரிசுத்த உடையாகவும், இருத்தலால் சைவமக்கள் அனைவரும் எப்போதும் நாட்டுப் பஞ்சினால் நாட்டினர் நூற்று நெய்த கதருடையினையே உடுத்த வேண்டுமென இக்கூட்ட[illegible]க் கொள்ளுகிறது. [illegible]ம் கேட[illegible]

[illegible]20. தமிழ் நாட்டிலே சமயக் கல்வி [illegible]கி விட்டபடியால், சைவசமய நலத்திற்கே ஏற்பட்டுள்ள மடாதிபதிகள், சைவர்கள் வாழும் ஊர்கள் தே[illegible] சைவத் தமிழ்க்கலாசாலைகளை நிறுவியும், பிரசாரகர்களை நியமித்துச் சொற்பெருக்கிடச் செய்தும் சமய வளர்ச்சித் துறையில் பெரு முயற்சி செய்விக்க வேண்டுமென இக்கூட்டத்தார் வேண்டிக் கொள்ளுகிறார்கள்.

21. நாட்டிலே சமயக்கல்வி அருகிச் சமய உண்மைகள் பரவாதிருந்தால், கோவில்களும், திருவிழாக்களும், போதிய பயனை யளியாமல், பெருங்கேடு விளைவிக்கும் நிலையினை யடைந்து பிற சமயத்தார்களால் பழி கூறப்படும் வகையில் சென்று அறிஞர்களின் எண்ணத்திற்கு மாறாக அழிந்து விடுமாதலின், கோவில்களின் வரும்படிகளில் ஐந்தில் ஒரு பங்கு வீதம் எடுத்துச் சமயக்கல்வியை வளர்க்கும், தமிழ்க் கலாசாலைகளையும், கோவில்பணி செய்யும் வகை, கோவிலாட்சி முறை, இவைகளைப் போதிக்கும் பாடசாலைகளைப் போற்றுவதுடன் பிரசாரகர்களைப் பயிற்றிச் சமயபோதனை செய்யச் செய்யவும் பயன்படுத்தல் இன்றியமையாததாகவிருக்கும்படி அறநிலைய பாதுகாப்பு மசோதாவில் போதியபடி விதிகளைத் திருத்தியமைத்து உடனே அமுலுக்குக் கொண்டுவரச் செய்யவேணுமாய் இந்துமத போர்டாரையும் சட்ட நிருபண சபை உறுப்பினர்களையும், பார்ப்பனரல்லாத சைவ மக்களனைவரையும் இக்கூட்டம் கேட்டுக் கொள்ளுகிறது.

22. பொட்டுக் கட்டுதல் என்னும் அறியாவயதுடைய பெண் மக்களைத் தீயவழியில் பழக்குங் கொடிய வழக்கத்தையும், விவாகமென்றதை யறியா இளங் குழந்தைகளைக் கட்டுப்படுத்தி [illegible]யாட்டுக் காட்சியாக்கி உலகவின்[illegible]த்தையே இழந்து தவிக்கச் செய்யும் தீய பழக்கத்தையும், ஒழித்து நாடு சீருறப் பாடுபடும் திருமிகு டாக்டர் முத்து[illegible] அவர்களும், சாரதா அவர்களும் சென்னை, இந்தியா சட்டசபைகளில் கொண்டுவரும் மசோதாக்களை ஆதரித்து விரைவில் சட்டமாக்கிப் பயன்படுத்துமாறு சட்டசபை உறுப்பினர்களையும் ஆட்சியாளர் (கவர்மெண்டார்)களையும் இக்கூட்டம் வேண்டிக் கொள்ளுகிறது.

23. பள்ளிக்கூடங்களுக்குத் தமிழ்ப் பாடங்களை ஏற்றுக்கொள்ளும் (டெக்ஸ்புக் கமிட்டியார்) கமிட்டியார் ஏற்கும் புத்தகங்களில் நாட்டுமக்கள் மனதைப் புண்படுத்தும் சூத்திரன் என்பது போன்ற இழி சொற்களும், வகுப்புக்கசப்(துவேஷம்)பினை யுண்டாக்கும் அறிவற்ற பார்ப்பனர் உயர்ந்தவர் மற்றவர் தாழ்ந்தவர் என்னும் பொய்க் கதைகளும் இல்லாதிருக்கும்படி நன்கு ஆராய்ந்து ஏற்றுக் கொள்ளும்படியும், பள்ளிக்கூடங்களில் பாடபுத்தகங்களாக நிச்சயிக்கும் முன்பாக இதனை இன்றியமையாது கவனித்தே வைக்கவேண்டுமெனப் பள்ளிக்கூட அதிகாரிகளையும், உபாத்தியாயர்களையும் இக்கூட்டத்தார் கேட்டுக் கொள்ளுகிறார்கள்.




34 ஆண்டுகளாய் நிலவும்
வாரப் பத்திரிகை

பத்திராதிபர் :
பரலி - சு. நெல்லையப்ப பிள்ளை

தமிழர்கள் புத்துயிரும் புது வாழ்வும் பெறுமாறு உழைத்து வரும் வாரப் பத்திரிகை. உலகத்தில் அந்தந்த வாரத்தில் நடக்கும் செய்திக ளெல்லாம் 'லோகோபகாரி'யில் சுருக்கமும் விளக்கமுமாக வெளிவரும். பாரததேசம் சகல துறைகளிலும் சுயராஜ்யம் பெற்று, லோகமெல்லாம் க்ஷேமம் அடைய வேண்டுமென்பதே 'லோகோபகாரி' யின் நோக்கம். உலகத்தில் அற நெறியும் அன்பு நெறியும் வளர்ந்து இன்பம் நிலவுமாறு லோகோபகாரி நெடுங்காலமாக உழைத்து வருகிறது. இதனைத் தமிழ் மக்கள் ஆதரிக்கவேண்டும்.

வருஷ சந்தா ரூபாய் நான்கு; வெளி நாட்டுக்கு ரூபாய் ஆறு.
மாதிரிப் பிரதி இனாம்.

"லோகோபகாரி" பத்திரிகாலயம்,
Ex. சிந்தாதிரிப்பேட்டை, சென்னை.



# கந்தபுராணச் சுருக்கம்

## மூலமும் பொழிப்புரையும் விருத்தியும்

இந்நூல் ஸ்ரீமத் - சம்பந்தசரணாலய சுவாமிகளால் சொற்சுவை, பொருட்சுவை, சந்தச்சுவை முதலியன ததும்ப 1000 பாடல்களாகப் பாடப்பட்டது. கடல்போல் பரந்துகிடக்கும் பெரிய கந்தபுராணக் கதையை இனிது விளக்குவது. மூலத்திற்கேற்ற பொழிப்புரையும், விருத்தியும் பலநூற் பிரமாணங்களுடன் எழுதப்பட்டுள்ளன. டிம்மி 8-பக்க அளவில் நல்ல காகிதத்தில் அச்சிடப்பட்டது. 496 பக்கங் கொண்டது.

காலிகோ பயிண்டு விலை ரூ. 3.

முருகவேள் புத்தகசாலை,
இராயப்பேட்டை, சென்னை.

24. கோவில் கட்டுதல், திருவிழா நடத்தல், தங்கம், வெள்ளி, இரத்தினங்களால் திருவாபரணங்களும், வாகனாதிகளுஞ் செய்வித்தல், இலட்ச தீபங் காணல், இலட்சார்ச்சனை புரிதல், ஆண்டவன் பேரால் அறுசுவை யுணவிடல் முதலியவைகள் பெருதற்கரிய சிவபுண்ணியச் செயலாயினும் நாட்டு நிலையை நோக்குங்கால் சமயக் கல்வியும், சமய உண்மைகளும், கோவில்களைப் போற்று முறையும், இப்போதிருப்பதுபோன்றே செல்லுமானால் ஆன்றோர்களாக்கிய இவைகளத்தும் ஒரு பயனுமின்றி வீணாகுமாதலின், அறம்புரியும் பெரும்பொருட் பேறடைந்த சைவத் தமிழ் மக்கள் சைவ சமயக்கல்வியைப் பெருக்கும் சமய வளர்ச்சித் துறையிலேயே அதனைச் செலவிட்டுப் பயனடைதலே சிறப்புற்ற சிவ தருமமாகுமென இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

25. சமய உண்மைகளையும், சமயாசிரியர்கள் திருவாய் மலர்ந்தருளிய தேவாராதி திருமுறைகளில் உண்மைச் சைவசமய ஞான சமரஸம் பொதிந்துள்ள அருட்பாசுரங்களையும், கோவிலமைப்பு, கடவுள் திருவுருவங்களின் தத்துவம், திருவிழாக்களின் தத்துவங்கள் முதலியவற்றைச் சிறு துண்டுத் தாட்களில் அச்சிட்டு வழங்குவதும்; சமய ஆராய்ச்சியாளர்களைக் கொண்டு நாட்டு மக்களுக்குப் போதனை செய்வதும் ஆலயங்களை நன்முறையில் திருத்தி நடத்தச் செய்வதுமே இதுகாலை செய்யவேண்டிய இன்றியமையாத சமயத் திருப்பணியாகுமெனச் சைவத் தமிழ் மக்களுக்கு இக்கூட்டம் அறிவித்துக் கொள்ளுகிறது.

(ஒப்பம்) ச. சச்சிதாநந்தம் பிள்ளை,
8—4—1928.

## வேண்டுகோள்

எல்லாம் வல்ல சிவபெருமான் திருவருளினாலே இத்தீர்மானங்கள் இருபத்தைந்தும் மதிநுட்ப நூலாராய்ச் சித்திறனமைந்தவர்களும், சமயப்பற்றும், சமய வொழுக்கமும், சிவநேயமும், ஒருங்கே யமையப்பெற்ற பேரறிஞர்களுமான அன்பர்களின் மாபெருங் கூட்டத்திலே நன்றாக ஆலோசிக்கப் பெற்றும், நன்கு வாதிக்கப்பெற்றும், சமய வளர்ச்சிக்கு இதுகாலை இன்றியமையாது அனுட்டிக்கத் தக்கதாமென முடிவு செய்திருப்பவைகளாதலால் இதனை எல்லா மட[illegible]திகளும் சைவத் தமிழ் மக்களும், கோவில் ஆட்சியாளர்களும், தேவஸ்தானங்களின் கமிட்டியார்களும், இந்து மத பரிபாலன (அறநிலயப் பாதுகாப்புக் கழ[illegible]வர்) போர்டாரும், போதியபடி ஆதரித்துச் செயலில் (அமுலுக்கு) வரும்படி அதற்காவனவற்றை உடனே செய்விக்கும்படிக்கும், இதற்கு எல்லாவகையிலும் போதிய உதவிகளை செய்விக்கும்படி அரசாங்கத்தாரையும், பணிவுடன் கேட்டுக் கொள்ளுகிறோம்.

இங்ஙனம்:

பூவாளூர், சைவ சித்தாந்த சங்கத்தார்.

187121

| சந்தா விவரம் | | | |
|---|---|---|---|
| வருட சந்தா | ரூ. | 1-8-0. | தபாற்கூலி இல்லை. |
| வெளிநாடு | ,, | 2-0-0. | |

| விளம்பர விகிதம் | | | | |
|---|---|---|---|---|
| முழுப்பக்கம் | ரூ. | 10 | 0 | 0 |
| அரைப்பக்கம் | ,, | 5 | 0 | 0 |
| கால்பக்கம் | ,, | 3 | 0 | 0 |

---

'ஆதி வாழிய அஞ்செழுத் தோடுவெண்
பூதி வாழிய புண்ணியர் வாழிய
நீதி வாழிய நீள்புவி வாழிய
கோதில் சைவக் குலமிக வாழியே.'

Printed at the Sadhu Press, 12, Ganapathi Mudali Street, Royapettah,
Edited and Published by Mani, Thirunavukkarasu Mudaliar for the
Saiva Siddhanta Maha Samajam.